உ

சிவமயம்

# சைவநீதி
# SAIVANEETHI



மலர் 10 | விய - புரட்டாதி | SEPTEMBER - OCTOBER 2006 | இதழ் 6



விலை 25/=

உ
சிவமயம்

'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'

சைவநீதி

SAIVANEETHY

மலர் 10 விய - புரட்டாதி சைவசமய வளர்ச்சி கருதி வெளிவரும் மாத இதழ் - 6



# நலம் தரும் பதிகங்கள்

## பதிகம் 16

## எடுத்த கருமங்கள் இனிதே முடிய பாராயணம் செய்ய வேண்டிய பதிகம்

**திருஆலவாயில் சமணர்களுடன் வாதிடுவதற்குச் சம்பந்தப்பெருமான் புறப்படும்பொழுது, சொக்கநாதப் பெருமானிடம் சென்று வணங்கிப் பாடியருளிய பதிகமாகும் இப்பதிகம். தான் மேற்கொள்ளப்போகும் காரியம் எளிதே, இனிதே முடிந்திட ஆண்டவனின் அருளை வேண்டி நிற்கும் பதிகமாகும். தொழில், வியாபாரம், மற்றும் எந்தக் காரியத்தைத் தொடங்கினாலும் சரி, இப்பதிகத்தைப் பக்தியுடன் பாராயணம் செய்ய வேண்டும். அந்தக் காரியம் இனிதே முடியும் என்பது பலர் கண்ட அனுபவ உண்மையாகும். இப்பதிகத்தைப் பாடிய பின், சம்பந்தர் சமணர்களுடன் போட்டியிட்டு (அனல்வாதம், புனல்வாதம்) வெற்றி பெற்றதை நாம் யாவரும் அறிந்ததே ஆகும்.**

திருச்சிற்றம்பலம்

**திருஆலவாய்** **பண்: பழம்பஞ்சரம்**

வேத வேள்வியை நிந்தனை செய்துழல்
ஆதமில்லி அமணொடு தேரரை
வாதில் வென்றழிக் கத்திரு வுள்ளமே
பாதி மாதுட னாய பரமனே
ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையும்எம் ஆதியே.
1

வைதி கத்தின் வழியொழு காதவக்
கைத வம்முடைக் காரமண் தேரரை
எய்தி வாதுசெ யத்திரு வுள்ளமே
மைதி கழ்தரு மாமணி கண்டனே
ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையும்எம் ஆதியே.
2

மறைவ ழக்கமி லாதமா பாவிகள்
பறித லைக்கையர் பாயுடுப் பார்களை
முறிய வாதுசெ யத்திரு வுள்ளமே
மறியு லாங்கையின் மாமழு வாளனே
ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையும்எம் ஆதியே.
3

அறுத்த அங்கம்ஆறு ஆயின நீர்மையைக்
கறுத்த வாழ்அமண் கையர்கள் தம்மொடும்
செறுத்து வாதுசெ யத்திரு வுள்ள
முறித்த வாண்மதிக் கண்ணி முத வனே
ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையும்எம் ஆதியே.
4

(இதன் தொடர்ச்சி 2ம் பக்கத்தில்)

# பொருளடக்கம்

1. சிவயோக சாதனையும் சப்த விடங்கமும் .......... 3
2. திருப்புகழ் .......... 8
3. குமார தந்ர ஆகமம் - ஓர் அறிமுகம் .......... 9
4. ஆகம மரபும் - ஸ்ரீ முன்னேஸ்வர கர்ப்பக்கிருக இலிங்கமும் .......... 12
5. கண்ணுதல் அன்பர் காதல் .......... 15
6. யாழ் நாயன்மார்கட்டு சித்திரத்தேர் மலர் - விமர்சனம் .......... 18
7. தேவாரம் என்ற சொற்கோயில்தான் மூவர் தமிழ் .......... 20
8. திருவருட்பயன் .......... 23

(1ம் பக்கத்தின் தொடர்ச்சி)

அந்த ணாளர் புரியும் அருமறை
சிந்தை செய்யா அருகர் திறங்களைச்
சிந்த வாதுசெ யத்திரு வுள்ளமே
வெந்த நீற தணியும் விகிர்தனே
ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையுமெம் ஆதியே.
5

வேட்டு வேள்வி செயும்பொரு ளைவிளி
மூட்டு சிந்தை முருட்டமண் குண்டரை
ஒட்டி வாதுசெ யத்திரு வுள்ளமே
காட்டி லானை உரித்தஎங் கள்வனே
ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையுமெம் ஆதியே.
6

அழலது ஓம்பும் அருமறை யோர்திறம்
விழல தென்னு மருகர் திறத்திறம்
கழல வாது செயத்திரு வுள்ளமே
தழலி லங்கு திருவுருச் சைவனே
ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையுமெம் ஆதியே.
7

நீற்று மேனிய ராயினர் மேலுற்ற
காற்றுக் கொள்ளவும் நில்லா அமணரைத்
தேற்றி வாதுசெ யத்திரு வுள்ளமே
ஆற்ற வாள ரக்கற்கும் அருளினாய்
ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையும் எம்ஆதியே.
8

நீல மேனி அமணர் திறத்துநின்
சீலம் வாதுசெ யத்திரு வுள்ளமே
மாலும் நான்முக னுங்காண் பரியதோர்
கோல மேனிய தாகிய குன்றமே
ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையுமெம் ஆதியே.
9


அன்று முப்புரம் செற்ற அழகநின்
துன்று பொற்கழல் பேணா அருகரைத்
தென்ற வாது செயத் திருவுள்ளமே
கன்று சாக்கியர் காணாத் தலைவனே
ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையுமெம் ஆதியே.
10

கூடல் ஆலவாய்க் கோனை விடைகொண்டு
வாடல் மேனி அமணரை வாட்டிட
மாடக் காழிச்சம் பந்தன் மதித்த இப்
பாடல் வல்லவர் பாக்கிய வாளரே.

திருச்சிற்றம்பலம்

சைவநீதி இதழில் வெளிவரும் கட்டுரைகளிலுள்ள கருத்துக்களுக்குக் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாளிகளாவர்.

- இதழ் நிர்வாகிகள் -



# சிவயோக சாதனையும் சப்த விடங்கமும்

தியாகராஜப் பெருமான் கொலுவீற்றிருந்து அருள்பாலிக்கும் திருவாரூர் உள்ளிட்ட சப்த விடங்கத்தலங்கள் சைவ சமயத்தில் தனிச்சிறப்பிடம் பெறுகின்றன. பொதுவாக இவற்றைச் சிவத்தலங்கள் என்ற முறையிலேயே சென்று வழிபடுகின்றோம். சிவயோக சாதனையாளர்களால் இத்தலங்களுக்குச் சிவயோக முறையில் சிறப்பான விளக்கம் தரப்படுகின்றது. அதன்படி இவை மனித உடலில் உள்ள ஆறு ஆதாரங்களுடன் உச்சியைத் திறக்கும் வாயிலையும் சேர்த்த ஏழு தானங்களைக் குறிக்கும் குறியீடு என்பர். மேலும் சிவயோக சாதனையால் எழும் குண்டலினிசக்தியானது ஒரு ஆதாரத்திலிருந்து மறு ஆதாரத்திற்குச் செல்லும் நிலையையே தியாகராஜ நடனங்கள் குறிக்கின்றன என்றும் சிவயோகத் தியானத்தில் தோன்றும் ஒளிக் காட்சியையே விடங்கலிங்கங்கள் உணர்த்து கின்றன என்றும் கூறப்படுகின்றது. அவற்றைப் படிப்படியாக இக்கட்டுரை விளக்குவதைக் காணலாம்.

பெறற்கரிய பேரின்பத்தையும் அளவற்ற ஆற்றலையும் பெறுவதற்குப் பலவகையான நெறிகளைச் சைவசமயம் போதிக்கின்றது. அவற்றுள் ஒன்றே யோக சாதனையாகும். பல்வேறு சமயங்கள் பலவகையான யோகசாதனைகளைப் பற்றிப் பேசுவதால் சைவசமயம் பேசும் யோக சாதனை சிறப்புப் பெயரால் சிவயோக சாதனை எனப்பட்டது. அதிலும் சிவபெருமானைப் பின்பற்றிச் செய்யப்படும் யோக சாதனையாதலில் இது **'சிவராஜயோகம்'** எனப்பட்டது. இந்த யோகவித்தையைப் பயில்பவர்கள் சிவபெருமானை யோகேசுவரனென்றும், "பரமயோகி" என்றும் அழைத்தனர். அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகிய மூவருமே தேவாரத்துள் பல இடங்களில் சிவபெருமானைப் "பரமயோகி" என்று குறித்துள்ளதைக் காணலாம்.

திருவாரூரில் சிவபெருமான் தியாகராஜ கோலத்தில் ராஜயோகியாக வீற்றிருந்து அருள்பாலிக்கின்றான் என்று யோக மார்க்கத்தினர் கூறுகின்றனர்.

யோகசாதனையின் முதல்படி, உடலில் கருவாய்க்கும், எருவாய்க்கும் நடுவில் உள்ள மூலாதாரம் என்னுமிடத்தில் பாம்புவடிவில் சுருண்டு உறங்கிய நிலையில் இருக்கும் மூலாதார சக்தியை விழிப்புறச் செய்து அதனை மேல்நோக்கி எழுப்புவதாகும். இதனை எழுப்புவதற்குக் குருவின் அருளுடன் பிராணாயாமம் என்னும் மூச்சுக் காற்றுப் பயிற்சியும் தேவையாகும். யோகசாதனையால் எழுந்த அச்சக்தியானது, (பின்னர் மூலா தாரத்திற்கு நான்கு விரற்கிடை) மேலுள்ள சுவாதிஷ்டானம், கொப்பூழுக்கு நேரேயுள்ள மணிபூரகம், இருதயத்திலுள்ள அநாகதம், கழுத்திலுள்ள விசுத்தி, புருவமத்தியிலுள்ள ஆக்ஞா ஆகிய ஆறு இடங்களில் படிப்படியாக மேலேறிச் சஞ்சரித்துப் பின்னர் கபாலவாயில்

நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்
வீடில்லை நட்புஆள் பவர்க்கு 791

ஒருவரோடு நட்புக் கொண்ட பின்பு அவரை விட்டு விலகுதல் இயலாது, ஆகையால் ஆராயாமல் நட்புக்கொள்வது போலக் கேடு தருவது வேறொன்றும் இல்லை.

என்னும் பிரமரந்திரம் வழியாக வெளிப்பட்டுத் தலைக்குமேல் உள்ள சஹஸ்ராரம் என்னும் இடத்தை அடைந்து இறையின்பத்தை அனுபவிக்கின்றது.

இப்படி மனித உடலில் உள்ளதாகச் சொல்லப்பட்ட ஆறு ஆதாரங்களும் கபாலவாயில் என்னும் ஏழாவது தலமுமே, பூவுலகில் சப்தவிடங்கத் தலங்களாக உள்ளன என்று கூறப்படுகின்றது. இனி இவை எவ்வாறு சப்தவிடங்கத் தலங்களோடு ஒன்றுகின்றன என்பதைக் காணலாம்.

இதில் முதலில் சொல்லப்படும் திருவாரூர் என்பது மூலாதாரத் தலமாகும். மூலாதாரத்தில் உயிர்ச்சக்தியாகிய குண்டலினி பாம்புவடிவில் கிடக்கின்றது என்பதைக் குறிக்கவே அங்கு பாம்புப் புற்றில் பெருமான் வீற்றிருப்பதாகக் குறிக்கப்பட்டுள்ளது. இந்த மூலாதாரத்தின் அதிதேவதை விநாயகர் ஆவார். இவர் மூலாதார கணபதி என்ற பெயரில் திருவாரூரில் தூணொன்றில் எழுந்தருளியுள்ளார்.

இரண்டாவதான சுவாதிஷ்டானம் என்ற ஆதாரத்தைக் குறிக்கும் தலம் திருக்காறாயில் ஆகும். இந்த இரண்டாவதான ஆதாரத்தைக் குண்டலினி சக்தி அடையும் போது யோக சாதகனைச் சுற்றிலும் தெய்வீக மணம் கமழும் அந்தத் தெய்வீக வாசனையின் குறியீடாகவே இத்தலம் கருஞ் சந்தனமாகிய காறாயில் வனம் (கார் + அகில்) என்று அழைக்கப்படுகின்றது.

அதனையடுத்த மூன்றாவதான மணிபூரகம் என்னும் ஆதாரம் நாகப்பட்டினம் என்று குறிக்கப்படுகின்றது. கட்டுக் கடங்காத சக்தியுடன் எழுந்த குண்டலினி சக்தி நிதானத்துடன் பாம்புபோல் வட்டமிட்டுச் சஞ்சரிக்கும் இடமாதலின் பாம்பையும், அதன் மணியையும் குறிக்கும் வகையில் இது நாகப்பட்டினம் எனப்பட்டது.

நான்காவது ஆதாரமான அனாகதத்தைக் குறிக்கும் தலம் திருநள்ளாறு ஆகும். ஏழு ஆதாரத்தானங்களில் இது நடுவில் இருப்பதால் (நள் + பதி, ஆறு =வழி) பாதி வழியில் இருப்பது என்ற பொருள்பட நள்ளாறு எனப்பட்டது.

ஐந்தாவதாக கண்டத்தில் விளங்கும் விசுத்தி என்பது திருக்கோளிலி என்ற தலமாகக் குறிக்கப்பட்டுள்ளது. குண்டலினி சக்தி அநாகதத்திலிருந்து விசுத்திக்குச் செல்லும் பாதை மிகவும் கடினமாகும். உரியகுருவின்றி இச்சாதனையில் ஈடுபடுபவர்களுக்கு சாதனையில் கடும் மயக்கம் உண்டாகும். சமயத்தில் மரணமும் நேரும். இந்த இடத்தில் சாதகன் செல்வதை நெருப்பாறும் மயிர்ப் பாலமும் என்று சித்தர்கள் பரிபாஷையில் கூறுவர். இதனைக் கடந்து விசுத்தியை அடைந்து விட்டால் குண்டலினி சக்தி வெற்றியடைந்து விட்டது என்றே கூறலாம். குண்டலினி சக்தியின் குற்றங்களை நீக்கி மேன்மையடைய வைப்பதால், இது கோளிலி எனப்பட்டது. (கோள் +இலி =குற்றமில்லாத இடம்) என்பர்.

ஆறாவது ஆதாரமான ஆக்ஞா என்பதே திருமறைக்காடு எனும் தலமாகக் குறிக்கப்பட்டுள்ளது. புருவமத்தியில் விளங்கும் ஆக்ஞா என்ற ஆதாரத்தில் சக்தியேறி நிற்கும் போது நெற்றிக்கண் என்னும் ஞானக்கண் திறக்கின்றது. இது திறந்து விட்டால் உலகிலுள்ள அனைத்து வேதங்களையும் சாதகன் ஓதாது உணர்ந்து விடுகின்றான். அதனால் இது வேதவனம் என்றும் மறைக்காடு என்றும் குறிப்பால் உணர்த்தப்பட்டுள்ளது.

இந்த ஆறு ஆதாரங்களைக் கடந்த

**ஆய்ந்துஆய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை**
**தான்சாம் துயரம் தரும்** **792**

ஒருவனுடைய குணங்களையும், செயல்களையும் நல்லவைகளா என்று பலமுறையும் பல வகையாலும் ஆராய்ந்து பாராமல் அவரோடு கொள்ளும் நட்பு, இறுதியில் தான் சாவதற்குக் காரணமான துயரத்தை உண்டாக்கும்.

குண்டலினி சக்தி கபாலவாயில் வழியாக வெளிப்பட்டு தலைக்கு மேல் பன்னிரண்டு விரற்கிடை தூரத்திலுள்ள சஹஸ்ராரத்தை அடையும். ஏழாவதாக விளங்கும் கபால வாயிலே திருவாய்மூர் என்ற தலமாகச் சொல்லப்பட்டுள்ளது. திருவாகிய கடவுட் காட்சிக்கு வாயாக (வழியாக) இருக்கும் காரணத்தால் இது திருவாய்மூர் என்றழைக்கப் பட்டது.

எட்டாவதாக விளங்குமிடமே சிதம்பரப் பெருவெளியாகிய சஹஸ்ராரமாகும். இதில் சிவபெருமான் ஓயாது நடனம் புரிகின்றார். அதனால்தான் குண்டலினியின் ஆதி இருப்பிடமான திருவாரூரைச் சிதம்பரத்திற்கு மூத்த முதல் திருத்தலம் என்று குறிக்கின்றனர். அதனாலேயே திருவாரூரில் மாலை வழிபாட்டைக் கண்டவர்கள் சிதம்பரத்தில் கலைகளை ஒடுக்கும் நிகழ்ச்சியான அர்த்தசாமத்தையும் காணவேண்டுமென்றும் கூறுகின்றனர். இதன் மூலம் சப்த விடங்கத் தலங்களின் பெயர்கள் யோகநெறியில் சொல்லப்படும் ஆதாரங்களோடு பொருளால் ஒன்றுபட்டு நிற்றலை அறியமுடிகின்றது.

இனி தியாகராஜரின் நடனத்திற்கும், குண்டலினி சக்தி பயணம் செய்வதற்கும் உள்ள தொடர்பைக் காணலாம்.

குண்டலினி சக்தி மூலாதாரத்தில் விழித்தெழுந்து சஹஸ்ராரத்திற்குச் செல்லும் பாதையானது ராஜபாட்டை என்றும் யோகவழி என்றும் குலபதம் என்றும் பலவாறு அறிஞர்களால் குறிக்கப்படுகின்றது. இவ்வழியில் குண்டலினி சக்தி ஓரே சீராகச் செல்வதில்லை. முட்டிமோதி பலவகைச் சோதனைகளைக் கடந்தே வெற்றியை எட்டுகின்றது. இந்தப் பயணத்தின் பல்வேறு நிலைகளே தியாகராஜரின் நடனங்களாகச் சொல்லப் பட்டுள்ளது என்பர் யோகியர்கள்.

மூலாதாரத்தில் விழிப்புற்ற கனல், சுவாதிட்டானத்தை அடைய மேற்கொள்ளும் நிலையே திருவாரூர் தியாகராஜரின் அஜபா நடனமாகச் சொல்லப்பட்டுள்ளது. முதலில் ஜெபிக்கப்படாத அஜபா மந்திர முயற்சியில் எழுந்த குண்டலினி கனலாகச் சுடர்விட்டுப் பிரகாசிக்கின்றது. இதனால் சாதகனின் உடலில் வெப்பம் அதிகமாகிறது. இந்த சக்தி கட்டுக் கடங்காமல் நிலை கொள்ளாமல் குதிக்கும் தீக்கொழுந்தினை ஒத்ததாக உள்ளது.

‘அஜபா’ என்னும் சொல், “வாய்வழியால் உச்சரிக்கப்படாதது” என்ற பொருளுடையது. நாம் ஒவ்வோர் முறை மூச்சுவிடும்போதும் “ஸோஹம்” எனும் மந்திரத்தை மனத்தால் உறைத்து நின்று எண்ணுதலே அஜபா தியானமாகும். இம் முறையில் தியானிக்கையில் ஒரு நாளுக்கு 21,600 முறை இதயத்திலுள்ள சிறு இடைவெளியில் ஏற்படும் அசைவே ஞான நடனமாகும். இவ்வசைவே அஜபா நடனமாகும். இதனையே “ஊன் நில் ஆவி உயிர்க்கும் பொழுதெலாம் - நான் நிலாவி இருப்பன் என் நாதனை” என நாவுக்கரசர் ஆரூர்ப் பதிகத்தில் விளக்கியுள்ளார்.

சுவாதிஷ்டானத்திலிருந்து மணிபூரகம் செல்லும் கதியை உணர்த்துவது திருக்காரவாசல் தியாகரின் நடனமாடிய குக்குட நடனமாகும். இது துள்ளுதல் குறைந்து சண்டைக்குச் செல்லும் கோழி இடமும் வலமும் பார்த்துச் சாய்ந்து சாய்ந்து மிக எச்சரிக்கையுடன் செயல்படுவது போன்று அமைகின்றது. எச்சரிக்கையின்றி செயல்பட்டால் குண்டலினி சக்தி அவிந்து விடுவதுடன் மீண்டும் அதனை எழுப்பக் கடும் முயற்சிதேவை

**குணமும் குடிமையும் குற்றமும் குன்றா**
**இனனும் அறிந்துயாக்க நட்பு** 793

ஒருவனுடைய குணத்தையும், குடிப்பிறப்பையும், குற்றத்தையும், குறைவற்ற சுற்றத்தையும் ஆராய்ந்து அறிந்து அவனோடு நட்புக் கொள்ள வேண்டும்.

என்பதை இது உணர்த்துகின்றது. கோழியும் அக்னியின் மற்றொரு குறியீடு என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மணிபூரகத்திலிருந்து - அநாகதத்தை அடையும் பயணநிலையைக் குறிப்பது நாகைத் தியாகராஜரின் வீசி நடனம் என்கின்ற பாராவார நடனமாகும். முதலில் மிக்க ஆவலுடன் ஆர்ப்பரித்து கட்டுக்கடங்காது பயணம் செய்த குண்டலினியின் நிலை பின்னர் சற்று அடங்கிச் செயல்பட்டது. இங்கு இன்னும் அடங்கி கடல் அலைகள் சுழன்று சுழன்று விழுவதுபோல அமைந்திருக்கின்றது. இதனால் பாராவார தரங்க நடனம் எனப்பட்டது (பாரவாரம் - அலை: தரங்கம் - கடல்)

இதனையடுத்ததாகிய அநாகதத்திலிருந்து விசுத்திக்குச் செல்லும் வழி கடுமையானதென்று முன்னமேயே கூறப்பட்டது. சாதகன் இதில் பயணம் செய்யும்போது இது அவனைப் பயித்தியக்காரனைப் போல ஆக்குகின்றது. அது தீர சாதகர்கள் பாகற்காயும் தூதுவளைக் கீரையும் உண்ணுகின்றனர். இந்த நிலை உன்மத்த நிலையாதலின் இந்த நடனம் உன்மத்த நடனம் எனப்பட்டது. இதுவே அநாகதத்தில் வீற்றிருக்கும் நள்ளாற்று நம்பனின் உன்மத்த நடனமாக விளங்குகின்றது.

அடுத்ததாக விசுத்தியிலிருந்து ஆக்ஞா என்ற ஆதாரத்திற்குச் செல்லும் வழி சற்று எளிய தென்றாலும் அதிலும் பல தடைகளைக் கடக்க வேண்டியதாகிறது. இந்தப் பயணம் மேலும், கீழும், பக்கவாட்டிலும், வட்டமிட்டும் சுழன்றும் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதனால் இது பூவினைச் சுற்றி எழுந்தும் தாழ்ந்தும் வட்ட மிட்டும் பறக்கின்ற வண்டின் ஆட்டத்திற்கு இணை யாகச் சொல்லப்பட்டது. இந்தப் பிரமரநடனம் என்ற வண்டு நடனமே கோளிலிப் பெருமானுக்கு நடனமாகச் சொல்லப்பட்டுள்ளது.

தொடர்ந்து ஆக்ஞா சக்கரத்தில் நிலைபெற்று எல்லாவற்றையும் உணர்ந்து கொண்ட சக்தி அன்னம் நடப்பது போல் அடிமேல் அடிவைத்து அசைந்து அசைந்து சென்று கபாலவாயிலை அடைகின்றது. எனவே இது அம்சபாத நடனம் எனப்பட்டது. இதுவே திருமறைக்காட்டுத் தியாகராஜரின் நடனமாகச் சொல்லப்பட்டது.

இறுதியாகக் கபாலவாயிலைத் திறந்து கொண்டு மேலே செல்லும் சக்தி தாமரைமலர் குளத்தின் நீரில் மெல்லிய நீரலைகளுக்கு ஏற்ப ஆடியாடி அசைவதுபோல வருத்தமின்றி எளிதாகச் செல்லுகின்றது. இதனால் இது கமல நடனமாகத் திருவாய்மூர் விடங்கர்க்குச் சொல்லப்பட்டுள்ளது.

இதன் மூலம் குண்டலினி சக்தி பயணம் மேற்கொள்ளும் பலவகையான நிலைகளைக் குறிப்பதே தியாகராஜரின் நடனங்கள் என்பதை உணர முடிகின்றது.

***ஒளிக்காட்சியும் விடங்கலிங்கமும்***

இதனையடுத்து சாதகனுக்கு யோக சாதனையின்போது தோன்றும் ஒளி நிலைகளைக் காணலாம். யோகப் பயிற்சியின் போது சாதகர்களின் உள்ளுக்குள்ளேயே ஒளி தோன்றுகின்றது. இந்தச் சாதனை வளரவளர ஒளியின் வண்ணம் மாறிமாறி அமைகின்றது.

இதனைக் குறிக்கும் வகையில் தியாகராஜர் சந்நிதியில் வண்ண லிங்கங்கள் அமைக்கப் பட்டுள்ளன என்பர். (இவற்றில் பெரும் பாலானவை இடம்மாறி விட்டன. என்றும், அவற்றிற்குப் பதிலாக ஸ்படிகம் அல்லது மரகத லிங்கங்கள் வைக்கப்பட்டன. எனவும் கூறுவர்)

**குடிப்பிறந்து தன்கண் பழிநாணு வானைக்**
**கொடுத்தும் கொளல் வேண்டும் நட்பு** **794**

உயர் குடியில் பிறந்த தன்னைப் பற்றி உலகம் கூறும் பழிக்கு அஞ்சுபவனை அவன் விரும்பியவற்றைக் கொடுத்தாவது நண்பனாகக் கொள்ளுதல் வேண்டும்.

யோக சாதகனின் உடலில் குண்டலினி எழுந்ததும் அவன் தனக்குள்ளே அதிக சூட்டையும் செம்மணியின் ஒளிபரவுவதையும் உணர்கின்றான். அதுவே "மாணிக்கத் திரள்" எனப்பட்டது. இதனையொட்டியே திருவாரூரில் வீற்றிருக்கும் பெருமான் மாணிக்கத் தியாகர் என்று அழைக்கப்படுகின்றார்.

இதனைக் கடந்து சுவாதிட்டானத்தை அடையும் போது சாதகன் (ஆரஞ்சு) இளஞ் சிவப்பு வண்ணமான காட்சியைக் காண்கின்றான். அதனைத் தொடர்ந்து மணிபூரகத்தினை அடையும் போது பொன்நிறமான மஞ்சள் ஒளிவெள்ளத்தைக் காண்கிறான். இதனையொட்டியே செம்மஞ்சள் நிறமான கோமேத லிங்கம் நாகபட்டினத்தில் வைத்து வழிபடப்பட்டு வருகின்றது.

இதனையடுத்த அநாகதத்தினை அடையும் போது பச்சை ஒளி தோன்றுகின்றது. இதுவே பச்சைக் கல்லால் அமைந்த திருநள்ளாற்று மரகதவிடங்கராகப் போற்றப்படுகின்றது.

இதனையடுத்து அவன் விசுத்தித் தலத்தில் கருநீல நிறத்தைக் காண்கின்றான். அதற்கு மேலே புருவமத்தியில் நீல நிறம் பிரகாசிக் கின்றது. இந்த நீல நிறம் அறிவுக் கண்ணாக வெளிப்படும். ஆதலின் இது நீல லோகிதம் எனப்பட்டது. அதனையடுத்த கபாலவாயிலில் வெளிறிய நீல நிறம் தோன்றுகின்றது. இதனைக் குறிக்கவே ஏழாவது தலமான திருவாய்மூரில் வீற்றிருக்கும் தியாகர் நீல விடங்கர் என்று அழைக்கப்படுகின்றார். இங்கு நீலக்கல் லிங்கம் வழிபாட்டில் உள்ளது.

இங்கு சொல்லப்பட்டவை ஏழு நிறங்கள் என்றாலும் இதனுள் பின்னால் சொல்லப்பட்ட கருநீலம், நீலம், வெளிர்நீலம் ஆகிய மூன்றுமே நீலநிறத்தின் சாயலேயாகும். எனவே சாதகன் நீல நிற ஒளியைத் தன்னுள் காண்பதே சாதனையின் வெற்றியாகக் கொள்ளப்பட்டது. இந்த வெற்றியை நினைவு கூரவே திருவாரூர் தியாகராஜரின் வலப்பக்கம் நீலநிறப்பட்டில் சிவலிங்கம் அமைக்கப்பட்டுள்ளது என்பர். மேலும் தியாகராஜருக்கு நீலநிறங்கொண்ட கழுநீர்ப் பூக்களால் அர்ச்சனை செய்யப் படுகின்றது.

இவ்வாறு பலவகையிலும் சிவயோக நெறியின் குறியீடாகவே தியாகராஜ வழிபாடு விளங்குவதை யோக அறிஞர்கள் குறித்துள்ளனர். இதுபற்றிய இன்னும் விரிவான விளக்கங்கள் பல நூல்களில் தகுந்த முறையில் விளக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம். ❋


## சைவநீதி மாத இதழ்

பெறுமதி விபரம்

**தனிப் பிரதி ரூபா 25.00 ஆண்டொன்றிற்கு ரூபா 250.00 ஏனைய நாடுகளில் ஆண்டொன்றிற்கு ஸ்ரேலிங் பவுண் 10 அல்லது US$ 15**

***சைவநீதியின் வளர்ச்சியில் எங்கள் பங்களிப்பு என்ன என்பதை நாம் ஒவ்வொருவரும் சிந்திப்போமாக.***

சந்தா அனுப்பவேண்டிய முகவரி

***C. Navaneethakumar,***
*No. 4, Somagiri Place,*
*Colombo - 06.*
*Sri Lanka.*
*Tel : 0773830365*


**அழச் சொல்லி அல்லது இடித்து வழக்குஅறிய**
**வல்லார்நட்பு ஆய்ந்து கொளல்** **795**

நன்மை அல்லாத செயலைச் செய்தபோது கண்டித்து மனம் வருந்துமாறு அறிவுரை கூறி உலக நடை அறிந்து அதன் படி நடப்பிக்கும் திறமையுடையவரை ஆராய்ந்து கண்டு, அவரோடு நட்புக் கொள்ள வேண்டும்.



# திருப்புகழ்

திருமுருக கிருபானந்தவாரியார்

ஒரு வீட்டுக்கு, அதனைப் புதுக்கியோன் பேர் சூட்டுவான். "பங்கஜ நிலையம்", "அன்பு நிலையம்", "குமார பவனம்", "முருகனில்லம்" என்றெல்லாம் அழகு பெறப் பெயரிடுவார்கள்.

அதுபோல், ஒருநூல் செய்தவர்தான், அந்த நூலுக்குப் பேரிடுவார். இது தான் எங்கும் என்றும் வழக்கம்.

ஆனால், இதற்குப் புறநடையாக அருணகிரியார் பாடியருளிய பாடல்களுக்கு முருகனே திருப்புகழ் என்று பேர் சூட்டினாரா?, இல்லை பாட முன்னரேயே "திருப்புகழ் பாடு" என்று கட்டளையிட்டார். இக் கருத்தை,

**'திருப்புகழ் விருப்பமொடு செப்பென**
**எனக் கருள்கை மறவேனே'**

என்று அருணகிரிநாதரே கூறுகின்றார்.

சிவபெருமான் சுந்தரரைப் பார்த்துச் "சொற்றமிழ் பாடுக" என்று தான் கூறினார். முருகன் "தமிழ் பாடுக" என்று கூறினாரில்லை, "திருப்புகழ் பாடுக" என்றே கூறியருளினார். இதனால் திருப்புகழின் உயர்வு நன்கு தெரிகின்றதல்லவா?

திருவண்ணாமலையில், அருணகிரிநாதரைத் திருப்புகழ் பாடுக என்று கட்டளையிட்டு, வாக்கு வன்மை தந்த கந்தவேள், வயலூரில் திருப்புகழைப் பாடும் தன்மையும், ஊக்கமும் அன்பும் தந்தருளினார்.

**'பாத பங்கய முற்றிட உட்கொண்**
**டோதுகின்ற திருப்புகழ் நித்தம்**
**பாடு மன்பது செய்ப்பதி யில்தந் தவனீயே'**

என்று அருணகிரிப் பெருமான் கூறுவதால் அறிக. பல பிறவிகளில் செய்த புண்ணியம் இருந்தால் தான் ஒருவனுக்குத் திருப்புகழில் பற்று வரும்.

திருப்புகழ் என்பது, முருகப் பெருமானுடைய திருமார்பில் ஞானவொளி வீச விளங்கும் மதாணியாக விளங்குகின்றது.

**'உரைபெற வகுத்தகருணை நகரிலொரு**
**பத்தனிடும்**
**ஒளிவளர் திருப்புகழ் மதாணிக் காரனும்'**

- திருவகுப்பு-

திருமுருகன் திருமார்பில் திகழும் கடப்பமலர் மாலைக்குத் திருப்புகழ்ப் பாடல்கள் பன்னீராக அமைந்து மணங் கமழ்கின்றன.

**'பலபல பைம்பொன் பதக்க மாரமும்**
**அடிமை சொலுஞ்சொல் தமிழ்ப்ப னீரொடு**
**பரிமள மிஞ்சக் கடப்ப மாலையும் அணிவோனே'**

என்ற திருப்புகழ் வாக்கால் இதனை உணர்க.

இத்தகைய தெய்வத் திருமறையை, இடையறாது எப்போதுந் தப்பாது ஓதி ஓதி உணர்ந்து, உருகி வழிபாடு செய்து உய்வோமாக.

**கேட்டினும் உண்டுஓர் உறுதி கிளைஞரை**
**நீட்டி அளப்பதுஓர் கோல்** 796

**தீமையாக எல்லோராலும் வெறுக்கப்படும் கேட்டிலும் ஒரு நன்மை உண்டாகும், அது என்னவென்றால், அக்கேடே தன் நண்பர் எல்லாரின் அன்பையும் நன்றாக அளந்து அறிய உதவும் ஓர் அளவுகோல் என்பதாம்.**

# குமார தந்த்ர ஆகமம் - ஓர் அறிமுகம்

முனைவர் - கோ. விசயவேணுகோபால்
பிரெஞ்சு இந்தியவியல் ஆய்வு நிறுவனம், பாண்டிச்சேரி

சென்ற இதழின் தொடர்ச்சி....

### நூல்

இவ்வாகமம் லலிதாகமத்திற்கு உபாக மமாகச் சேர்க்கப்பட்டுள்ளது. காமிகாகமத்தில் ஆகமத் தோற்றம் சொல்லுமிடத்தில் இது லலிதாகமத்தின் பேதமாகச் சுட்டப்படுகிறது. காரணாகமத்தில் ப்ரஸ்நப் படலத்தில் ஏழாவது சுலோகத்தில் இது காரணாகமத்தின் சுருக்கமெனக் கூறப்படுகிறது. குமார தந்த்ரத்திலேயே இது ஸாரதா திலகத்தினின்றும் சொல்லப்படுகிறதெனவும், நாராயணீயத்தி லிருந்து சில மந்த்ரங்களைக் குறிப்பிடுகிற தெனவும் விளக்கப்படுகிறது. மேலும் இதே நூலில் 25ஆவது சுலோகத்தில் அஷ்டாவிம்யதி தந்த்ரத்திலிருந்து சுருக்கிக் கூறப்பட்டுள்ளது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மந்த்ர பேத மல்லது க்ரியா பேதமில்லை எனவும் குறிப்பிடப் படுகிறது. இக்கூற்றுக்களான - குமாரதந்த்ர ஆகமம் பல நூல்களினின்றும் செய்யப்பெற்ற தொகுப்பு நூலே என்பது புலனாகிறது.

### காலம்

சாரதா திலகம் எனும் நூல் பல தெய்வங்கள் குறித்த மந்திரங்களின் தொகுப்பு நூலாகும். இந்நூலில் காணப்படும் முருகனைப் பற்றிய மந்திரங்கள் குமார தந்திரத்திலும் வருவதால் இதன் காலம் சுமார் கி.பி.12 ஆம் நூற்றாண்டு ஆகலாம்.

### நூல் அமைப்பு

சிவபெருமானின் ஐந்து முகங்களில் தோன்றிய இருடிகளில் ஒருவராகிய கௌசிகர் (உத்தர காமிகாகமம் 25 ஆவது கோத்ர நிர்ணய படலம் பார்க்க) எனும் முனிவர் கேள்வி கேட்கச் சிவபெருமான் அவற்றிற்கு விடை கூறுவதுபோல இந்நூல் அமைந்துள்ளது. அதனால் இந்நூலுக்கு “கௌசிகப் ப்ரச்னம்” எனும் பெயரும் உண்டு. (தேவி ப்ரச்னமாக அமைந்த குமார தந்த்ரமும் உண்டு. ஆனால் அது இன்றும் அச்சாகவில்லை)

### நூல் படலங்கள்

இந்நூலில் 51 படலங்கள் உள்ளன. இவற்றின் உள்ளடக்கங்களை விரிவாகக் கூற இங்கு இடமில்லாததால் படலக் கருத்துக்கள் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன. சுவை கருதிச் சில படலச் செய்திகள் சிறிது விரிவாகத் தரப்பட்டுள்ளன.

**1. ப்ரச்ன படலம்**

முருகனுடைய வழிபாட்டுக்குத் தேவையான மந்த்ரம், கோயில், அதனைக் கட்டும் முறை, (முருகனை எவ்வாறு நிறுவுவது, என்னென்ன திருவிழாக்கள், திருப்பணிகள், எவ்வாறு செய்வது) முதலானவை பற்றிக் கௌசிகர் வினாக்கள் எழுப்ப இவற்றிற்கு (2 ஆம் படலம் முதல்) சிவபெருமான் விடை சொல்லும் முறையில் அமைந்துள்ளது.

**2. மந்த்ரப் படலம்**

இதில் முருகனுக்குரிய மந்திரங்களும், வள்ளிக்குரிய மந்திரமும் (தேவசேனாவிற்கு மந்த்ரங்கள் தரப்படவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது), முருகனுடைய எட்டுப்

ஊதியம் என்பது ஒருவற்குப் பேதையார்
கேண்மை ஒரீஇ விடல் 797

ஒருவனுக்கு ஊதியம் என்று சொல்லப்படுவது அறிவில்லாதவரோடு தெரியாமல் செய்து கொண்ட நட்பை விட்டுவிட்டு அவரிடத்திலிருந்து நீங்கிக் கொள்வதாம்.

பரிவாரங்களுக்குரிய (கஜேந்திரன், அக்னி, யமன், நிருருதி, வருணன், வாயு, சோமன், சுமித்ரன்) மந்திரங்களும் முருகனின் வாகன மாகிய மயிலுக்குரிய மயூர மந்த்ரம், முருகன் கையில் வைத்திருக்கும் சக்திப் படைக்கான மந்திரம், பஞ்சாயுதங்களாகிய சக்தி, தனுசு, சரம், அக்ஷமாலை, கமண்டலம் ஆகியவற்றிற் கான மந்திரங்கள் ஆகியவை விளக்கப்பட்டுள்ளன. முருகனுக்குரிய மந்திரங்களாக மூல மந்திரம், பிரம்ம மந்திரம், ஷண்முக மந்திரம், ஸ்கந்த காயத்திரி, கார்த்திகேய மந்திரம், ஷடக்ஷர மந்திரம், மாலா மந்திரம் ஆகியன குறிப்பிடப் படுகின்றன. வள்ளிக்குரியது வள்ளி பீஜ மந்திரம் எனப்படும் இவற்றோடு 'யந்த்ரம்' எப்படி அமைப்பது என்ற விபரமும் தரப்பட்டுள்ளது. மேலும் அங்கங் களைத் தொட்டு மந்திரம் சொல்லும் சௌசாச மநவிதி நியாசங்களும் விளக்கப்பட்டுள்ளன.

3ஆம் (நித்ய கர்மா) 4ஆம் (ஸ்நாந நுஷ்டான விதி) 5ஆம் படலங்கள் (நித்ய பூஜாவிதி) ஆகியன பூசை செய்பவர் காலையில் எழுந்திருந்து செய்யவேண்டிய கடமைகள் (காலைக் கடன்களை முடித்துப் பல் தேய்ப்பது, பல் குச்சி எது? எவ்வளவு நீளம்? உடலுறுப்புக்களை எவ்வாறு சுத்தம் செய்வது, எத்தனை முறை வாய்க் கொப்பளித்தல் வேண்டும்? போன்றவை) பூசை செய்பவர் எவ்வாறு குளிக்க வேண்டும்? என்ற விவரம் நித்ய பூசைகளை எங்கு செய்வது? (வீட்டிலா? கோவிலிலா? என்ற விவரமில்லை எனினும் துவக்கத்தில் இவற்றை வீட்டில்தான் செய்திருக்க வேண்டும்) பூதசுத்தி, ஆத்மசுத்தி, மந்த்ர சுத்தி, திரவ்ய சுத்தி, பிம்ப சுத்தி ஆகியவற்றைச் செய்தல், அபிடேகத்திற்குரிய திரவியங்கள், இவற்றால் அபிடேகம் செய்தல், பத்மாசனத்திலமர்ந்து கொண்டு அணிகள் அணிவித்தல், நைவேத்தியம், தூபதீபம் காட்டுதல் அக்னிஹோமம் (அக்னியில் முருகனைப் பாவித்து) செய்தல் ஆகியன விளக்கப்பட்டுள்ளன.

6ஆம் நைவேத்தியப் படலம், அரிசி, யவம், நிவாரம் (பார்லி), கோதுமை ஆகிய நைவேத் திய தான்யங்கள், தான்யங்களின் அளவு, சமையல் முறை பாத்திரம் முதலானவற்றை விளக்குகிறது. பனசம் (பலா) ஆலாபு (சுரைக்காய்), கதலி, மா, வெள்ளரி, பூசணி, புடலை ஆகிய காய்கள் பயற்றம் பருப்பு, நிஷ்பாவகம் (அவரை, மொச்சை) கிழங்குகள் (கிடைப்பவை) ஆகியவற்றோடு உப்பு, மிளகு, நெய், சீரகம் சேர்த்து நைவேத்தியம் செய்ய வேண்டும். நைவேத்தியம் செய்யும் போது வேக வைத்த கிழங்குகள், கறிவகைகளை அன்னத்தோடு சேர்த்துச் செய்ய வேண்டும்.

**7ஆம் படலம் அக்னிகார்ய விதிப்படலம்**

இதில் குண்டங்களின் அமைப்பு, அளவு, என்னென்ன திரவியங்கள் கொண்டு ஹோமம் செய்ய வேண்டும்? ஹோமங்களுக்குரிய மந்திரங்கள் முதலானவற்றை விளக்குகிறது.

**8ஆம் படலம் நித்யோத்ஸவ விதிப்படலம்**

தின உத்சவர்கள் இவற்றிற்கெனத் தனியாகச் செய்யப்பட்ட மூர்த்திக்கே செய்யப்படவேண்டும். மேலும் மூர்த்தி கோவில் பிரகாரத்தைச் சுற்றி வருதல், அப்போது எட்டுத் திக்குகளிலும் பலி இடுதல், அப்போது என்னென்ன இசைக் கருவி களை இசைக்க வேண்டும்? போன்ற விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. தாளக் கருவிகளில் பேரி, முரசம் ஆகியன கௌசிகத் தாளத்தில் இசைக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள் ளது. பேரி வாசிப்பவன் மந்திரம், தாளம் அறிந்த வனாயும் முதல் நாள் உபவாசமிருந்து பூணூல் வெள்ளைத் தலைப்பாகை அணிந்து விபூதியிட்டு சிவதீக்ஷை பெற்றவனாயும் இருத்தல் வேண்டும். பேரியை வாசிக்கும்போது

உள்ளற்க உள்ளம் சிறுகுவ கொள்ளற்க
அல்லற்கண் ஆற்றுஅறுப்பார் நட்பு — 798

ஊக்கம் குறைவதற்குக் காரணமான செயல்களைச் செய்யக் கருதக் கூடாது துன்பக் காலத்தில் கைவிடுவார் நட்பைக் கொள்ளக்கூடாது.

'ப்ரேம்பகமந்திரம்' சொல்லி ஒரு தரமும், 'இதம் பிஷ' எனத் தொடங்கும் வேத மந்திரத்தைச் சொல்லி இரண்டு தரமும், பிரம்ம மந்திரத்தைச் சொல்லி மூன்று தரமும் வாசிக்க வேண்டும்.

**9ஆம் படலம் குண்டலஷ்ண விதிப்படலம்**

பிரதிஷ்டை ஜீர்ணோத்தாரணம், மகோத் சவம், முதலானவற்றிற்கான குண்டங்களின் அமைப்பு, அளவுகள் (குண்டமாநம், குண்ட பேதம், குண்டமாந பலம்) ஆகியன விளக்கப்பட்டுள்ளன.

**10ஆம் படலம் மண்டலம் பற்றியது**

மண்டலம் எப்படி வரைவது அளவுகள், என்ன நிறப்பொடிகள் பயன்படுத்துவது, பிரதிஷ்டை, பவித்ரோத்சவம், மஹோத்சவம் ஆகியவற்றிற் கான மண்டலங்கள் முதலானவை பற்றி விளக்குகிறது. 11ஆம் படலம் குஹா தீட்சை என்ற தலைப்பில் தீட்சா விதிகளை எடுத்துக் கூறுகிறது. 12 ஆம் படலம் பல்வேறு விதமான, பல எண்ணிக்கைகளிலான கலசங்கள் கொண்டு அபிடேகம் செய்தல் பற்றிக் கூறுகிறது. 9 முதல் 108 கலசங்கள் வரை பயன்படுத்தப்படலாம் என விளக்குகிறது.

13ஆம் படலம் உத்சவம் பற்றியது மஹோத்சவம் இன்ன நட்சத்திரங்கள் கூடி, இன்ன தினத்தில், இன்ன காலத்தில் செய்ய வேண்டியதை எடுத்துக் காட்டுகிறது. உத்சவ மரபை விளக்கும் போது அங்குரார்ப்பணம் தொடங்கி நடத்தப்பட வேண்டியவற்றை விரிவாக விளக்குகிறது. கொடியேற்றுதல் ஒரு முக்கிய நிகழ்ச்சியாகும். எனவே இப்படலம் கொடியின் அளவு, கம்பத்தின் அளவு, பேரி வாசித்தல், அஸ்திர மந்திரம் சொல்லிக் கொடியேற்றுதல் ஆகியவை பற்றி அடுத்துக் குறிப்பிடுகிறது. பேரி வாசிக்கும்போது புடம், அபிபுடம், உத்கட்டிதம், மட்யம், ஜம்புடம், சிம்மநாதம் ஆகிய தாளங்களில் வாசிக்க வேண்டும்.

இசை வரலாறு பற்றி ஆய்வோர்க்கு இப்பகுதி பெரிதும் பயன்படும். பேரியோடு பஞ்ச வாத்யமும் வாசிக்க வேண்டும். மேலும் கும்பக வாத்தியத்தையும் வாசித்து மணி அடித்தல் வேண்டும். இந் நிகழ்ச்சிக்குப் பின் அஸ்திர தேவதையின் முன் இன்னின்ன இடங்களில் நிருத்தம் செய்ய வேண்டுமெனவும் குறிப்பிடப் பட்டுள்ளது. இதன்படி 9 ஸந்திகளில் நிருத்தம் செய்தல் வேண்டும். நவஸந்திகளும் அவற்றிற் கான தாளம், ராகம் ஆகியனவும் வருமாறு:-

| | |
|---|---|
| இந்திர ஸந்தி | - சமதாளம், காந்தார கீதம் (அஃதாவது பண்) |
| அக்னி ஸந்தி | - அர்த்ததாவனம், கொல்லி கீதம் |
| யம ஸந்தி | - பிருங்கிணி, கௌசிகப்பண் |
| நிருருதி ஸந்தி | - மல்ல, நட்டபாஷா (அதாவது நட்டபாடை) |
| வருண ஸந்தி | - நவதாளம், ஸ்ரீகாமரம் |
| வாயு ஸந்தி | - பலிதாளம், தக்கேசி |
| சௌம்ய ஸந்தி | - நட்டபிரகாரம், தக்கராகம் |
| ஈசான ஸந்தி | - டக்கரி, சாலாபாணி. |

இனி நிருத்தம் செய்யும்போது எந்தச் சந்தியில் என்ன ஆடல்வகை என்பதும் தரப்பட்டுள்ளது. இதன்படி ஆடல் வகைகள் வருமாறு :-

| | |
|---|---|
| நடு - | தண்டபாதம் |
| கிழக்கு - | ஊர்த்தவ பாதம் |
| அக்னி மூலை - | மண்டலம் |
| தெற்கு (யம) - | புஜங்கத்ராசிதம் |
| நிருருதி - | புஜங்க நிருத்தம் |
| வருண திசை - | நர்த்தனி |
| வாயு திசை - | பிரமரி |
| வடக்கு - | ஆலீடம் |
| ஈசானம் - | ப்ரத்யாபீடம் |

இவை தமிழிசை வரலாறு, திருக்கோவில் களில் ஆடல் வரலாறு ஆகியன பற்றி ஆய்வு செய்வார்க்குப் பெரிதும் பயன் தருவன.


இன்னும் வரும் ...

**கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை அடுங்காலை**
**உள்ளினும் உள்ளம் சுடும்** 799

ஒருவனுக்குக் கேடுவரும்போது கைவிட்டு ஒதுங்குபவரின் பொய்யான நட்பு, அவன் தன்னை எமன் வந்து கொல்லும் போது நினைத்தாலும் அவன் உள்ளத்தைத் தீப்போலச் சுடும். (வருந்தச் செய்யும்)

# ஆகம மரபும் - ஸ்ரீ முன்னேஸ்வர கர்ப்பக்கிருக இலிங்கமும்

பா.சி. சர்மா, B.Sc (Cey,) Dip.in.Ed, (Cey.)




இலங்கையில் ஆகம மரபுகளுக்கேற்ற முறையில் அமைந்த சேத்திரங்களுள் ஸ்ரீ முன்னேஸ்வர திருத்தலம் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். காரணாகமும், காமிகாகமும் சிவனுடைய மூர்த்தி பேத வடிவமைப்புகளை விபரமாக பிரமாணங்களுடன் விளக்கிக் காட்டுகின்றன.

சிவமூர்த்தங்களுக்கெனப் பொதுவாகக் குறிப்பிடப்படும் உருவ, அருவ, அருவுருவ திருமேனிகளுள் விசேடமானதெனக் கருதப்படும் அருவுருவ நிலையைச் சித்தரிப்பது இலிங்கத் திருமேனியாகும். இலிங்கம் என்ற சொற்றொடர் 'அடையாளம்' என்ற கருத்தைச் சுட்டி நிற்கும். எனவே சிவனைக் குறிப்பிட்டுக் காட்டும் அடையாளமெனச் சிவலிங்கத்தைக் கருதலாம். கண்ணால் காண இயலாதவனை எளிதிற் கிரகிக்க முடியாதவனை, வழிபாட்டினாலும் தியானத்தினாலும் கிரகிக்க முற்படுவோருக்கு சிவலிங்கம் பரம்பொருளை உணர்த்தும் அடையாளமாக விளங்கும். இலிங்கம் பற்றியும் ஏனைய வடிவங்கள் பற்றியும் இதிகாச புராணங்களில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

சிவம் என்ற சொல் மங்கலம் என்ற கருத்தைத் தரும். மங்கலத்தைத் தருவது பர வெளி என விரியும். எல்லாப் பொருள்களோடு சேர்ந்தும், அப்பொருள்களிலிருந்து பிரிந்தும், அப்பொருள்களில் பற்றற்றும் இருக்கக் கூடிய பொருள் அகண்ட வெளியாக அமைவுறுமே தவிர உருவமாகவோ அருவுருவமாகவோ இருக்க முடியாது எனலாம். ஆகாயம் போன்ற இது, நான்கு பூதங்களோடு (மண், நீர், நெருப்பு, காற்று) சேர்ந்தும், அதேவேளை, ஒன்றுடனும் சேராது தனித்தும் நிற்கும். எனவே பரவெளியே சிவத்தின் வடிவமாகும். ஆகாயம் என்ற பூத வெளி அறிவில்லாத சடமாகும். சிவமானது பரவெளியாகும் அறிவுடைய சித்து. இப்பர வெளி சிதா காயம், ஞானகாயம் என்றெல்லாம் குறிப்பிடப்படும். இதனை விளக்குவதற்கு ஞான வெளியாகிய சிவலிங்கத்தின் திருமேனி உயர்ந்தும் வட்டமாக அகன்றும் அமைந்துள்ளதை திருமந்திரம் காட்டுகின்றது.

இலிங்கம் என்ற சொல் "யாவும் தோன்றி மறையும் மூலம்" என்ற கருத்தைத் தரும். லிங் - லயம், கம் - தோன்றல் என்ற கருத்தைத் தரும்.

இதனைச் சுப்பிரபேதாகமும் சுட்டிக் காட்டுகின்றது. சிவலிங்கமானது ஆவுடையார் என்ற சிற்சத்தியின் மேல் நிறுவப்பட்டுள்ளது. பரசிவமாகிய பரவெளியில் எந்நேரமும் சிற்சக்தி என்ற அசைவு ஏற்பட்டவாறே இருக்கும்.

மருவுக மாசற்றார் கேண்மைஒன்று ஈத்தும்
ஒருவுக ஒப்புஇலார் நட்பு 800

குற்றமிலாதவருடைய நட்பையே தழுவிக் கொள்ள வேண்டும் உள்ளத்தால் பொருந்தாதவருடைய நட்பை அவர் விரும்பியது ஒன்றைக் கொடுத்தாவது விட்டுவிட வேண்டும்.

இவ்வாறான அசைவுச்சக்தி பரவெளியில் உள்ளது என்பதை பரவெளியை உணர்த்தும் சிவலிங்கத்தில் வளைந்திருக்கும் ஆவுடையார் குறிக்கின்றது. ஆவுடையார் ஒரு பக்கத்தில் கோமுகியாக நீண்டிருக்கின்றது. இது கோவாகிய பசுக்களை (உயிர்களை) தன்னகத்தே ஆட்கொண்டு மலநீக்கம் செய்து சிவமாக்கும் செயலைக் குறிக்கும்.

இலிங்கம் என்ற சொல் யோனி, லிங்கம் என்ற பதங்களுடன் தொடர்புற்றுக் காணப்பட்டாலும் இவை அடையாளம் அல்லது அம்சம் என்ற கருத்தில் எடுத்தாளப்பட்டுள்ளன. இவ்வாறே இலிங்கம் (ஜனன)க் குறிவழிபாட்டை அடிப்படையாகக் கொண்டது என்ற கருத்தும் முன் வைக்கப்பட்டது. இதே கருத்தைப் பல மேல் நாட்டாய்வாளர்களும் முன் வைத்தனர். எனினும் இவ்வெண்ணக் கருத்துக்குச் சான்றாக உள்ள வாதங்களை வரிசைக் கிரமமாக மறுத்து வாதிட்டு, இலிங்கம் என்பது சிவனுடைய சாந்நித்தியம் நிறைந்த தியான வழிபாட்டுக்கென்றே தோன்றிய சின்னம் என்று தெளிவாக நிறுவப்பட்டுள்ளது.

இலிங்க வழிபாட்டின் ஆரம்பம் பற்றிக் குறிப்பிடும் போது பிரமனும், விஷ்ணுவும் தங்களுக்குள் வல்லமை உள்ளவர் யார்? என அறிந்து கொள்ளும் பொருட்டு வாதாடி ஈற்றில் போர் தொடுத்தனர். அப்பொழுது எல்லாம் வல்ல இறைவன், உண்மையை விளக்கும் பொருட்டு இருவருக்குமிடையில் ஒளிப்பிளம் பாகத் தோன்றி இந்த ஒளிப் பிளம்பின் "அடியையோ அல்லது முடியையோ முதலில் காண்பவரே உங்கள் இருவரிலும் வல்லமை கூடியவர்" என அசரீரி வாக்கினால் உணர்த்தினார். பிரம்மன் அன்னப்பட்சி ரூபமெடுத்து முடியையும், விஷ்ணு பன்றி வடிவமெடுத்து அடியையும் காணச் சென்று, இறுதியில் ஜோதியின் அடிமுடி காணாது தோல்வியுடன் திரும்பி வந்து சிவனருளால் தம் ஆணவத்தை உணர்ந்து வழிபட்டனர். அன்று முதல் இலிங்க வழிபாடு இடம் பெற்று வருவதாகக் கூறப்படுகின்றது.

இலிங்க வழிபாட்டைப் பிரணவ கோட் பாட்டுடன் சிவபுராணத்தின் வித்யேஸ்வர சம்ஹி தையில் குறிப்பிடப்படுவது நோக்கற்பாலது.

இராமபிரான் இராவணனை சம்ஹாரம் செய்த பிரம்மஹத்தி தோஷ நிவர்த்திக்காக இராமேஸ்வரத்தில் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து பிராயச்சித்தம் செய்த விபரத்தை ஸ்கந்தபுராணம் காட்டும்.

ஆகம நூல்களும் பல்வேறு சிற்ப நூல்களும், சிவன் கோவில்களில் கருவறையில் பிரதான மூர்த்தமாக அமையும் சிவலிங்கம் இருக்க வேண்டிய அளவு முறைகளை விபர மாகக் காட்டுகின்றன. இலிங்கத்தை அமைப்ப தற்குத் தேர்ந்தெடுக்கப்படவேண்டிய கற்கள் பற்றி லிங்கலக்ஷன விதிப்படலத்தில் பூர்வ காரணாகமமும், பூர்வகாமிகாகமும் இயம்பும்.

மானசாரத்தின் லிங்கவிதானப் பகுதியிலும், காசியப சில்ப சாஸ்திரத்தின் சிவலிங்கலக்ஷணப் பகுதியிலும், சில்பரத்தினத்தின் லிங்கலக்ஷணப் பகுதியிலும், ஸ்ரீ ஸாரஸ்வதிய சித்திர கர்ம சாஸ்திரத்தின் லிங்கபேரமானப் பகுதியிலும், சகளாதிகாரத்தின் அளவைகளின் வகை என்ற பகுதியிலும் இலிங்கம் பற்றிய விரிவான விளக்கங்கள் தரப்பட்டுள்ளன.

கருவறையில் நிரந்தரமாக அசையாமல் அமைந்துள்ள தாவரலிங்க (பரார்த்தலிங்க)மே, பூசைகளுக்காக இடத்துக்கிடம் கொண்டு செல்லப்படுகின்ற ஜங்கம லிங்கத்தை விடச் சிறந்ததாகும்.

இலிங்க வகைகளை உருவாக்குவதற்கான கற்களைத் தேர்ந்தெடுக்கும் சிவாகிரகண முறைகளைப் பற்றி காரணாகமம் விரிவாகக் குறிப்பிடுகின்றது. இவ்வாறான கற்களைப் பெற்றுக் கொள்ளக் கூடிய இடங்களைப் பற்றிய விவரங்களை காமிகாகமம், காரணாகாகமம் காசியப சில்பசாஸ்திரம் ஆகிய நூல்கள் விளக்கிக் காட்டுகின்றன.

லிங்கம் அமைப்பதற்கு, கற்களில் உண்டாகும் ஒலியைக் கொண்டு அவற்றை புருஷ சிலைக்கல், ஸ்திரி சிலைக்கல், நபும்சக சிலைக்கல் என்று மூன்று வகையாகப் பிரிக்கலாம் எனக் காரணாகமமும், காசியப சில்பசாஸ்திரமும் காட்டுகின்றன.

புருஷசிலைக்கல்லைத் தட்டினால் மணியோசையையொத்த நாதத்தையும் நீண்ட வடிவத்தையும் கொண்டிருக்குமெனவும் ஸ்திரிசிலைக்கல்லைத் தட்டினால் பனை யோலையை ஆட்டும் போது ஏற்படும் ஓசையையொத்த ஒலியையும் கொண்டிருக்கும் மெனவும் நபும்சகசிலைக்கல்லைத் தட்டினால் கரடுமுரடான தன்மையையும் உறுதியற்ற நிலையையும் எவ்விதமான ஒலியையும் கொண்டிருப்பதில்லையெனவும் கூறப்படுகின்றது.

அதே வேளை கல்லின் வடிவமைப்பை ஆதாரமாகக் கொண்டு காசியப சில்பசாஸ்திரத்தில் சற்சதுரமாகவும் எண்கோண வடிவமாகவும் உள்ளவை ஸ்திரி சிலை எனவும் நீள் சதுரமாகவும் வட்டமாகவும் பத்துப் பன்னிரண்டு கோணமான வடிவமைப்பைக் கொண்டவை புருஷசிலை எனவும் வட்டமான உருவ அமைப்பைக் கொண்டவை நபும்ஸக சிலை எனவும் காட்டுகின்றது.

லிங்கத்தை புருஷசிலை வகைக் கல்லினாலும் ஆவுடையார் எனப்படும் பீடத்தை ஸ்திரி வகைக் கல்லினாலும் ஆதார அடித்தள பாதாதாரத்தை நபும்சக வகைக் கல்லாலும் வடிவமைக்க வேண்டுமென காசியபசில்ப சாஸ்திரம் காரணாகமம் ஆகிய நூல்கள் கூறுகின்றன.

மிகுதி அடுத்த இதழில்............

# நினைவிற் கொள்வதற்கு

விய
கார்த்திகை

| | | | |
|---|---|---|---|
| 01. | 17.11.2006 | வெள்ளி | மாதப்பிறப்பு |
| 02. | 18.11.2006 | சனி | சனிப்பிரதோஷம் |
| 04. | 20.11.2006 | திங்கள் | சோமவாரம், அமாவாசை விரதம் |
| 07. | 23.11.2006 | வியாழன் | மூர்க்க நாயனார் குருபூசை |
| 08. | 24.11.2006 | வெள்ளி | சதுர்த்தி விரதம், சிறப்புலி நாயனார் குருபூசை |
| 10. | 26.11.2006 | ஞாயிறு | ஷஷ்டி விரதம் |
| 11. | 27.11.2006 | திங்கள் | சோமவாரம் |
| 16. | 02.12.2006 | சனி | சனிப்பிரதோஷம் |
| 17. | 03.12.2006 | ஞாயிறு | திருக்கார்த்திகை விரதம், குமாராலய தீபம் |
| 18. | 04.12.2006 | திங்கள் | பூரணை விரதம், சர்வாலய தீபம், சோமவாரம், கணம்புல்ல நாயனார் குருபூசை |
| 19. | 05.12.2006 | செவ்வாய் | விநாயக விரதாரம்பம் |
| 22. | 08.12.2006 | வெள்ளி | சங்கடஹர சதுர்த்தி விரதம் |
| 25. | 11.12.2006 | திங்கள் | சோமவாரம் |
| 27. | 13.12.2006 | புதன் | மெய் பொருள் நாயனார் குருபூசை |
| 28. | 14.12.2006 | வியாழன் | ஆனாய நாயனார் குருபூசை |

# கண்ணுதல் அன்பர் காதல்

சிவ. சண்முகவடிவேல்

திருநாவுக்கரசு நாயனார் தமது வழிநடை வழிபாட்டின் போது தில்லைப் பதியைச் சென்று சேர்ந்தார். முத்தனாம் முதல்வனுடைய தில்லை அம்பலத்தில் ஆடும் அத்தனுடைய ஆடல் அதிசயத்தைக் கண்டு ஆனந்தித்தார். உல கெலாம் உணர்ந்து ஓதற்கரியவருடைய வாய்மைகளை அழகிய சொற்களால் அமைத்து தமிழ்த் திருப்பதிகங்களை அதிசயமாம்படி அருளிச் செய்தார். அன்பினால் நெஞ்சு நெக்குருக வார்ந்த மழை போலக் கண்கள் நீர் கலுழத் துதிக்கின்ற தூய வாயும் தமது செயலில் அகலாத உழவாரத் திருப்பணியும் மாறாமல் ஒழுகி வரும் நாட்களில் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் சீர்காழிப் பதியில் இரு பிறப்பின் நிலைமை யினை உணர்த்தும் உபநயனச் சடங்கு பெற்றிருந்தார். அப்பொழுது வேத முனிவர்கள் கவுணிய னாரைக் கண்முன் வரு தியானப் பொருள் என்று வணங்கினார்கள். தாங்கள் முன்னே வல்ல மறைகளில் தமக்குள்ள ஐயங்களை வினாவித் தெளிவு பெற்றார்கள்.

மேலும் அவ்வந்தணர்கள் மனந் தெளியும் தன்மையாக முந்தையாகிய முதன்மை பெற்ற மந்திரங்கள் எல்லாம் தோற்றுதற்கு அடிப்படை வேதநான்கினும் மெய்ப்பொருளாவது நாதன் நாமம் நமச்சிவாய என்னும் திருவைந்தெழுத்து, “அந்தியில் ஓதும் மந்திரம் அஞ்செழுத்துமே” என்று அஞ்செழுத்துத் திருப்பதிகத்தை, “துஞ்சலும் துஞ்சலிலாத போழ்தினும்” என்று ஆரம்பமாகும் ஸ்ரீ பஞ்சாக்கரப் பதிகத்தைப் பாடியருளினார் பாலறாவாயர்.

அத்தன்மையாக அருளிச் செய்த ஆளுடைய பிள்ளையார் அடியார்களுடன் இனிது அமர்ந்து அரனாருடைய அடிகளில் அன்பு பயின்று இருக்கும் நாளில்....

தில்லையில் பயிலும் திருநாவுக்கரசு நாயனார் ஆளுடைய பிள்ளையாருடைய அற்புதத்தை அடியார் மூலம் அதிசயத்தோடு கேட்டு அறிந்தார்.

உகக் கடைநாளில் பொங்கி எழுந்தது கடல் வெள்ளம். வெள்ளத்தின் மேலே மிதந்தது திருக்கழுமலம். ஆங்கு எழுந்தருளி இருந்தார் தோணியப்பர். தோணியப்பருடைய திருவருளி னாலே மலையரசன் மகளார் பெரிய நாயகியார் சிவம் பெருக்கும் ஞானத்தைத் தமது திரு முலைப்பாலுடன் குழைத்து ஊட்டினார். ஞான வாரமுது உண்ட ஞானக் குழந்தையின் வரலாற்றை அடியார்கள் நன்கு எடுத்து விளக்கினார்கள்.

அவற்றை எல்லாம் செவிமடுத்துக் கேட்டார் கலை வாய்மைக் காவலனார்.

தவமுதல்வர் சம்பந்தர் அம்மையாருடைய திருமுலைப்பால் அமுதத்தினை ஞானத்தோடும் குழைத்து ஊட்ட உண்டருளியவர் உடனேயே ஏழிசையும் பொருந்த வளமுடைய தமிழ் மாலை ஓத வல்லரானார். கடல் விடம் உண்ட சிவபெருமானை “எமது பெம்மான் இவன்” என்று சுட்டிக் காட்டிப் பாடியருள வல்லவர் சீகாழியில் அவதரித்த பெருந்தகையார். திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாருடைய சிறப்புக்களைச் சிந்தையில் கொண்டார். திருநின்ற செம்மையே செம்மையாகக் கண்டவர் அதிசயமான உணர்ச்சி யுடன் ஞானக் குழந்தையிடத்தில் காதல் முகிழ்ந்தது.

திருநாவுக்கரசு நாயனாருடைய திருவுள்ளத்தில் பெரு வாழ்வு தரும் பிள்ளை யாருடைய மலர் போன்ற திருப் பாதங்களை வணங்குவதற்கு ஒரு விருப்பம் எழுந்தது.

உடனே திருநாவுக்கரசு நாயனார் அம்பலத்தே அருட்கூத்து ஆடுகின்ற அம்பல வாணர் அடிகளை வணங்கினார். அங்கிருந்தும் அருள் விடை பெற்று அகன்றார். பொய்யாகிய

பிறவியைப் போக்கும் தன்மை பொலிந்த திரு வீதியினை மெய்யினால் புரண்டு வலம் வந்தார். தில்லையின் எல்லையில் நின்று அல்லல் அறுத்து ஆனந்தம் தருவாரை அன்போடு துதித்தார்.

சொற்பதங் கடந்த செல்வரை பாடிச் சீகாழி யைச் சேர வழிநடை வழிபாட்டை மேற்கொண்டார். சிவனடியார்கள் சூழ்ந்து திரண்டு வந்தார்கள்.

நாயனாருடைய திருமேனியில் திருநீறு நிறைந்த அழகு, அஞ்சலியாகக் கூப்பிய கைகள். அக்காட்சி கண்டவர்கள் மனம் கசிந்து உருக்கும் கருணையைப் பொழிந்து பொலிந்து தோற்றியது.

இவ்வாறாக வாய்மை திறம்பாத வாகீசர் வளம் மிக்க தமிழினால் எழுதும் வேதத்தை எடுத்து ஓதும் தமிழ் ஞானசம்பந்தர் அவதாரஞ் செய்த கழுமலப் பதிக்கு அருகாக வந்தணைந்தார்.

மேரு மலையை வில்லாகவுடையவர் சிவபெருமான். அவர் முன்னாளில் கொடிய சூலையைக் கொடுத்தவர். பின்னர் ஆட் கொண்டருளிய ஆளுடைய அரசு எழுந்தருளி வருகின்றார். இந்தச் செய்தியினை ஆளுடைய பிள்ளையார் கேட்டருளினார்.

வாய்மை திறம்பாத வாகீசரைக் காணும் பெரு விருப்பம் ஓங்கி வளர்ந்தது. திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார், அருள் பூண்ட மனத்தன்பர்கள் பலரும் புடை சூழ்ந்து வர எழுந்தருளி முன்னே வந்தார்.

"பெருவிறலுடைய வாக்கின் மன்ன வனாருடைய வருகை ..... இது முன் செய்த நல்வினையினால் வந்த பேறாகும்" என்று முத் தமிழ் விரகர் பெரு விருப்பினோடும் மகிழ்ந்தார்.

திருநாவுக்கரசு நாயனாரை கழுமலக் கவுணிய குலதிலகர் அந்தமிலாத திருவேடத் தோடு அணுகப் பெற்றார்.

சிந்தையில் இடையறாது பெருகும் அன்புப் பெருக்கு திருமேனியில் ஒரு அசைவு. கந்தையும் வேண்டுவது அன்று என்ற கருத்தாக மேலாடையாகிய ஒற்றைத் துண்டு. கையினிட மாக உழவாரப்படை. வந்து பெருகி வழிகின்ற கண்ணீர் மழை. திருநீறு விளங்கும் திருமேனி.

சிவபெருமானை அழுது அழைத்துத் தம்முன் வெளிப்பட்டு வரக்கொண்டருளிய பிள்ளை யாரும் தொண்டர் திருவேடத்தினைத் தொழு தார். முன்னாக வந்து அணைந்தார். தாண்டக வேந்தர் தம்மைச் சூழ்ந்த தொண்டர் கூட்டத் தினிடையே சென்றார். அன்பு பெருக உள்ளம் உருக கரை இகந்த காதலுடன் ஞானக் குழந்தை யின் திருவடிகளுக்கு வணக்கம் செய்தார்.

தவ முதல்வர் திருநாவுக்கரசு நாயனா ருடைய திருக்கரங்களைப் பற்றிக் கொண்டார். தமது எழுதுதற் கரிய மலர்க் கரங்களால் எடுத்தருளினார். தாமும் எதிராக வணங்கினார்.

"அப்பரே!" என்று மதுரவாக்கு மொழிந்தார். அப்பரும், "அடியேன்" என்றார். கானத்தின் எழுபிறப்பாளர் தாம் கருத்தில் பரவுகின்ற உண்மை அன்பின் பெருக்குக்கிடமாகிய தொண்டர் திருவேடம் நேரே தோன்றியது என்ற கருத்தினோடும் கைதொழுதார்.

இரு எம் பெருமக்களாகிய செம்பவளம் போலும் வாயினையுடைய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும், வாக்கின் மன்னவராகிய திருநாவுக்கரசு நாயனாரும் இயைந்த திருக்கூட்டத்தினைக் கண்டவர்கள் பேறு பெற்றவர்களானார்கள். சிவனடியார்கள் சிந்தையில் இன்பமுற்றார்கள் தேவர்களும் போற்றித் துதித்தார்கள். திருத்தொண்டர்கள் சிவம் பெருக்குவிக்கும் முழக்கத்தை உலகமெல்லாம் நிறைத்தார்கள்.

"அரகர சிவ சிவ அரகர சிவ சிவ அரகர சிவ சிவ" ஆளுடைய பிள்ளையார் கழல்கள் வணங்கும் பேறு எய்தினேன் என்று அரசு களிபேருவகையில் திளைத்தார். திருநாவுக்கரசு நாயனாரை வணங்கப் பெற்றமைக்குப் பிள்ளையார் பெரு மகிழ்வு எய்தப் பெற்றார்.

இரு பெரு மக்களுடைய மனத்தினுள் நிறைந்த மிகுந்த விருப்பினால் ஒருவர் மற்றவருள்ளே கலந்த உண்மை நிலைமையர்கள் ஆனார்கள். அந்நிலைமையைச் சேக்கிழார் தமது நிலைமையால் தரும் அழகு இது,

**பிள்ளையார் கழல்வணங்கப் பெற்றேனென்**
**றரசுவப்பப் பெருகு ஞான**
**வள்ளலார் வாகீசர் தமைவணங்கப்**
**பெற்றதற்கு மகிழ்ச்சி பொங்க**
**உள்ளநிறை காதலினா லொருவரொரு**
**வரிற்கலந்த வுண்மை யோடும்**
**வெள்ளநீர்த் திருத்தோணி வீற்றிருந்தார்**
**கழல்வணங்கும் விருப்பின் மிக்கார்.** (1449)

அருளினாற் பெருகும் ஒப்பற்ற கடலும் உலகங்களுக்கு எல்லாம் அன்பினால் பெருகும் கடலும் போன்றார்கள்.

ஓங்குகின்ற பொருளுடைய சமயங்களில் முதன்மை பெற்றது சைவம். அந்தச் சைவநெறி தான் பெற்ற புண்ணியக்கண் இரண்டானார்கள்.

உலகமெல்லாம் உய்யும் பொருட்டுக்கரிய விடத்தினை உண்டருளிய சிவபெருமான் திருவருளும் உலகமெல்லாம் ஈன்றெடுத்த உமையம்மையாருடைய திருவருளும் போன்றார்கள்.

தெளிந்த கலைஞானக் கன்றும் திருநாவுக்கரசு செஞ்சடா முடியினையுடைய சீகாழித் திருத்தலத்தைச் சென்று சேர்ந்தார்கள்.

பேரிசை நாவுக்கரசரைப் பிள்ளையார் போர் விடைப்பாகர்த் திருத்தோணிப் பொற் கோயிலூடே அழைத்துக் கொடு புகுந்தார். ஆர்வம் பெருக அணையும் அப்பருடன் அன்புடன் கும்பிட்டார்.

நாவின் வேந்தரை நணுகி, “அப்பரே! நீர் உங்கள் தம்பிரானைப் பாடுவீர்” என்று பணித்தருளினார் பாலறாவாயர்.

அது கேட்ட திருநாவுக்கரசு நாயனாரும் கண்கள் பெருகிய நீரைப் பொழிய, வாய்மைக் கலைகளிற் பொருந்திய மெய்த் திருமொழிகளை வாய் பொழிய மனம் உருகிப் பெரிய நாயகி அம்மையாருடன் திருத்தோணியில் விரும்பி வீற்றிருந்தருளும் தோணியப்பர் முன்னின்று அன்பு கூரும் செந்தமிழ் மாலையைப் பக்திப் பரவசத்தோடும், “பார் கொண்டு மூடி” என்னத் தொடங்கும் பதிகத்தைப் பாடியருளினார்.

திருச்சிற்றம்பலம்

**பார்கொண்டு மூடிக் கடல்கொண்ட**
**ஞான்றுநின் பாதமெல்லாம்**
**நாலஞ்சு புள்ளினம் ஏந்தின**
**என்பர் நளிர்மதியம்**
**கால்கொண்ட வண்கைச் சடைவிரித்**
**தாடுங் கழுமலவர்க்**
**காளன்றி மற்றுமுண் டோஅந்த**
**ணாளி அகலிடமே.**

**கரையார் கடல்சூழ் இலங்கையர்**
**கோன்றன் முடிசிதறத்**
**தொலையா மலரடி ஊன்றலும்**
**உள்ளம் விதிர்விதிர்த்துத்**
**தலையாய்க் கிடந்து யர்ந்தான்றன்**
**கழுமலம் காண்பதற்கே**
**அலையாப் பரிசிவை நாடொறும்**
**நந்தமை ஆள்வனவே.**

திருச்சிற்றம்பலம் (நாலாம் திருமுறை)

பிள்ளையார் மடத்தில் பேரரசு எழுந்தருளினார். ஆதரவோடு அமுது செய்தார். மருவிய அன்புறு கேண்மை அற்றை நாள் போல் வளர்ந்து ஓங்கியது. பிள்ளையாருடன் அகலா நட்புடன் பலர் உறவாடினர். பின்னர் சோழ நாட்டிலுள்ள திருத்தலங்களை வணங்கும் தமது மனக் காதலைப் பிள்ளையாருடன் பேசினார். பிள்ளையாரும் மறுக்காத மனத்தினராகி உடன் பட்டார். அரசுகள் உடனாகத் திருக்கோலக்கா வரையில் சென்று பிரியா அன்புவிடை பெற்று மீண்டருளினார் பிள்ளையார்.


திருநாவுக்கரசு நாயனார் அப்பால் சோழ நாட்டிலுள்ள திருத்தலங்களைச் சென்று தரிசிக்கும் கருத்தினராகித் தமது வழி நடை வழிபாட்டினை மேற் கொண்டருள்வாராயினார்.

# யாழ் நாயன்மார்கட்டு ஸ்ரீ இராசராசேஸ்வரி பேய்ச்சி அம்பாள் ஆலய சித்தரத்தேர் மலர்

## விமர்சனம்

*(பன்மொழிப்புலவர் த. கனகரத்தினம் பி. ஏ. இலண்டன் கல்வி டிப்ளோமா)*

சித்திரத்தேர் மலர் என்ற பெயரில் அழகான வண்ணப்படங்களுடன், பாரதி பதிப்பகத்தில் மலர்ந்திருக்கின்றது. யாழ் - நாயன்மார்கட்டு இராசராசேஸ்வரி அம்பாளின் சித்திரத்தேர் விழாவையொட்டி இம் மலரும் வெளியிடப் பெற்றிருக்கிறது. ஆலய பரிபாலன திருப்பணிச் சபையினரது தொண்டும் அயரா முயற்சியும் பாராட்டுக்குரியனவாகும். இவற்றை இம்மலர் வெளியுலகிற்கும் நல்ல முறையிற் பறை சாற்றி நிற்கின்றது.




முகப்புப்படம் அன்னையின் அருளாட்சியை எடுத்துக் காட்டுகின்றது. மலரின் பிற்பக்கத்தில் கோவிலின் படமும் புதுப் பொலிவு பெற்றுக் காட்சியளிக்கின்றது.

நல்லை ஆதின சுவாமிகள் மகோற்சவ பிரதமகுரு, ஆகியோரின் அருளாசிச் செய்திகளுடன் திருமலர் மலர்ந்திருக்கிறது. வாழ்த்துரைகள் ஆலயத் திருப்பணிகள் வழி பாட்டுக் கவிதைகள் (21) கட்டுரைகள் (09) அன்னை பாடல்கள் (02) அன்னை வழிபாடு, ஆலய பரிபாலன சபையினர் ஆகிய தலைப்புக்களில் மலர் இதழ் விரித்திருக்கின்றது. நறுமணம் கமழ்ந்து நிற்கின்றது.

பேய்ச்சி (பேர் ஆய்ச்சி) அம்பாளுக்கு வருடந்தோறும் ஆடிப்பூர மகோற்சவம் நடைபெறுவது வழக்கம். இம்முறை சித்திரத்தேர் ஓட்டமும் 27.07.2006 நிகழ்ந்திருக்கிறது. அதனை யொட்டியே இம்மலரும் வெளியிடப்பட்டிருக்கிறது.

தேர்த்திருவிழா கொண்டாட்டமாக அமைவதுடன் அதன் தத்துவத்தையும் விளங்கிக் கொள்ள இம்மலர் துணை நிற்கிறது. மூன்று பாகங்களாக அமைக்கப்படும் தேர் நம் உடல் அமைப்பின் செயற்பாட்டை எடுத்துக் காட்டுகின்றது. "தேரின் நடுப்பகுதியில் இறைவன் எழுந்தருளியிருப்பது எம் உள்ளத்தில் இறைவன் எழுந்தருளச் செய்வதாகும். **என அருளாசிச் செய்தியிலே** குறிப்பிடப்பட்டிருக்கிறது. மேலும் **"தேரோட்டம் வாழ்வின் நீரோட்டம்"** என்ற கட்டுரையில் தேரின் விரிவான தத்துவங்களும் அமைப்புக்களும் விளக்கப்பட்டிருக்கின்றன. இறைவன் மிகவும் நுண்ணி யவன் என்பதைக் கலசத்தின் கூம்பு வெளிப்படுத்துகின்றது. இறைவன் ஆழமானவன், அகலமானவன், நுண்ணியன் என்பதைத் தேர் வடிவம் வெளிப்படுத்துகின்றது. "ஆழ்ந்து அகன்ற நுண்ணியன்" என்ற மணிவாசகரின் திருவாசகமும் இதனை எடுத்துக் காட்டுகின்றது அன்றோ! தேர் சீரான பாதையில் ஓடுதற்குப் போடப்படும் சறுக்கிக் கட்டையிற்றானும் எவ்வளவு தத்துவம் அடங்கியிருக்கிறது. இவற்றையெல்லாம் எல்லோரும் விளங்கிக் கொள்ளும் வகையில் மலரின் கட்டுரைகள் அமைந்திருக்கின்றன. அவற்றை அடியார்களும் வாசகர்களும் பயன்படுத்திக் கொள்வார்களாக!

இவற்றிற்கு மேலாகத் "தமிழ் இலக்கியத்தில் தேர்" என்னும் ஆராய்ச்சிக் கட்டுரையை பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்கள் வரைந்திருக்கிறார்கள். "ஊரெல்லாம் கூடி ஒரு தேர் இழுக்கும்" எனச் சமூகத்தில் ஒற்றுமைத் தன்மையைத் தேர்த் திருவிழாக்கள் காட்டுவதையும் பேராசிரியர் விளக்கியுள்ளார். அதே நேரத்தில் சமூக இயங்கு நிலையின் குறியீடாக அமைந்த தேர் அச் சமூகத்தின் இறங்கு நிலையைக் காட்டுவதாக அமைந்த சம்பவத்தையும் சுட்டிக் காட்டுகின்றார்.

ஆலயத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ இராச ராசேஸ்வரி (பேய்ச்சி) அம்பாளின் தொன்மை, வழிபாடு, வரலாறு அருளாசி என்பவற்றை விளக்கும் பல அறிஞர்களின் ஆராய்ச்சிக் கட்டுரைகளும் மலரை அணி செய்கின்றன. "ஈழத்தில் தாய்த் தெய்வ வழிபாட்டின் தொன்மை" பற்றிப் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் அவர்கள் ஓர் ஆராய்ச்சிக் கட்டுரையை எழுதியுள்ளார்கள். தாய்த் தெய்வ வழிபாடு மிகவும் தொன்மையான வழிபாடு; ஈழத்திலும் பௌத்தம் வர முன்பு இவ் வழிபாடே செறிந்திருந்தது என்ற உண்மைகளையும் இக்கட்டுரையில் விளக்கியுள்ளார். அன்னை வழிபாடு பற்றி திருமதி நாச்சியார் செய்வநாயகம் சிறப்பான கட்டுரை வரைந்துள்ளார். தாய்த் தெய்வ வழிபாடுதான் அன்னை வழிபாடு, அம்மை வழிபாடு, அம்மன் வழிபாடு, அம்பிகை வழிபாடு எனப் பல பெயர்களில் வழங்கப்படுகின்றது. என்ற விடயங்களைத் தமது கட்டுரையிலே தந்துள்ளார்.

சக்தியானவள் பராசக்தி, பார்வதி, துர்க்கை, திருமகள், சரஸ்வதி, காளி, பவானி, புவனேஸ்வரி, இராஜராஜேஸ்வரி, லலிதா, மகா சுந்தரி எனப் பல வடிவங்களில் அடியவர்களுக்கு அருள்பாலிக்கின்றாள் என்பதைச் "சக்தி வழிபாடு" என்னும் கட்டுரை விளக்குகின்றது.

**'ஈழத்து அம்மன் ஆலயங்கள் - ஒரு வரலாற்றுப் பார்வை'** என்னும் கட்டுரையில் பேராசிரியர் செ. கிருஷ்ணராசா அருமையானதோர் ஆய்வினைத் தந்துள்ளார். ஈழத்தில் கண்ணகி வழிபாட்டு மரபு, ஈழத்தில் கண்ணகி கோவில்கள், ஈழத்தில் யக்ஷி வழிபாடு ஆகிய விடயங்கள் பற்றிய ஆய்வும் இக்கட்டுரையில் இடம் பெற்றுள்ளன. இக்கட்டுரைகள் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள மாணாக்கர்களுக்கும் மற்றவர்களுக்கும் மிகவும் பயன்படும் என்பதிற் சந்தேகமின்று.

**'ஆலயம் பண்பாட்டில் மகோற்சவம்'** எனும் தலைப்பில் பேராசிரியர் கலாநிதி ப.கோபால கிருஷ்ண ஐயர் அவர்கள் ஓர் ஆராய்ச்சிக் கட்டுரையைத் தீட்டியுள்ளார்கள். இக்கட்டுரையில் உற்சவத்தின் நான்கு வகைகள் உற்சவங்கள், தரும் பலன்கள், மகோற்சவத்தின் உச்ச நிலை தேர்த்திருவிழாவில் தேங்காய்களைச் சிதறித்தலின் தத்துவம் போன்ற பல விடயங்கள் விளக்கப்பட்டுள்ளன. சமயங்கற்கும் மாணாக்கர்களுக்கும் சைவமதத்தவர்களன்றிச் சமயதத்துவங்களை அறிய விளையும் பிறமதத்தவர்களுக்கும் இக்கட்டுரைகள் பயன்படுமென்பதிற் சந்தேகமின்று அன்றோ!.

ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்பாள் வழிபாட்டுக் கவிதைகளாகப் பல சிறந்த கவிஞர்களின் பாடல்கள் மலரில் இடம் பெற்று மலருக்கு மணமூட்டுகின்றன. கவிமாமணி மா. த.ந. வீரமணிஜயர் அவர்களின் திருவூஞ்சல் முதலான பல பக்திச் சுவை தரும் பாடல்கள் மலரை அழகும், மணமும், சுவையும் நிறைந்ததொன்றாக அலங்கரித்து நிற்கின்றன. பக்தர்கள் என்றும் பாடிப் பரவி நிற்க இவை பயன்படுவனவாகுக.

3 3 3 3 3 3 3 3 3

# தேவாரம் என்ற சொற்கோயில்தான் மூவர் தமிழ்

அறிஞர் முருகவேபரமநாதன்

எல்லாம் வல்ல எம்பெருமானுக்குக் கற்கோயில் பொற்கோயில் எடுப்போம். அங்கே அர்ச்சையாய் எழுந்தருளி அருள் பாலிக்கும் இறைவனுக்குப் பூவினாற் செய்யப்படுவது பூசை. இவ்வண்ணமே பல்வகை மலர்களினாலும் பத்திராதிகளாலும் பூமாலை தொடுத்து எம்பெருமானின் திருமேனியை அலங்காரம் செய்கின்றோம். பாமாலையால் அவன் பெரும் புகழைப் பாடிப் பரவுகின்றோம். கற்சிலைகளை வடிப்பவன் கற்கவி, சொன்மாலையால் கவிதை வடிப்போன் சொற்கவி, உணவை உதவும் நெல்லை விருத்தி செய்வோன் நெற்கவி என அழைக்கப்படுகின்றான். இப்பாமாலையின் பெருமையை நாநிறையப் பாடுகிறார் நாநிலம் போற்றும் தாயுமானப் பெருந்தகை.

**பன்மாலைத்திரள் இருக்கத் தமைஉணர்ந்தோர்**
**பாமாலைக் கேநீதான் பக்ஷம் என்று**
**நன்மாலை யாஎடுத்துச் சொன்னார் நல்லோர்**
**நலம்அறிந்து கல்லாத நாஙுஞ் சொன்னேன்**
**சொன்மாலை மாலையாக் கண்ணீர் சோரத்**
**தொண்டனேன் எந்நாளும் துதித்து நிற்பேன்**
**என்மாலை அறிந்து இங்கே வாவா என்றே**
**எனைக்கலப்பாய் திருக்கருணை எம்பிரானே!**

தாயுமானவர் பாடல் - 16 பன்மாலை

பன்மாலைத் திரள் இருக்க - பூமாலைகள் பல இருக்கச் செய்து, பக்ஷம் - விருப்பம், நன்மாலை - சிறந்த பாமாலை, என் மாலை அறிந்துஎன் விருப்பத்தை உணர்ந்து நாவழுத்தும் சொல்மலரோ நாள் உதிக்கும் பொன்மலரோ தேவை உனக்கு இன்னது என்று செப்பாய் பராபரமே!

பராபரக்கண்ணி 247

நாவழுத்தம் - நாவினாற் பாடி வணங்கும். சொல்மலர் - சொல்லால் ஆக்கப்பட்ட சொன் மாலை. நான் - தினமும் உதிக்கும் மலரும் பொன் மலர் அழகான பூமலர் - பாமாலையா பூமாலையா இறைவா நினக்கு விருப்பமானது என் வினவினார் சுவாமிகள்.

இப்பாமாலையையும் பூமாலையையும் ஒப்பிட்டுக் காஞ்சிப் பெரியவர் சொல்வதைக் கேட்போம்.

"பூமாலை, பாமாலை என்று சொல்கிறோம் அல்லவா - பூமாலை கண்ணுக்கு அழகான காட்சியாய்த் தெரிகிறது என்றால் பாமாலை காதுக்கு அழகான சொல்லும், சந்தமுமான ரூபத்தில் இருக்கிற பூமாலைக்கு வாசனை மாதிரி பாமாலைக்கு அதன் அர்த்தம். பூவில் இருந்து தேன் வருகிறது என்றால் பாலில் இருந்து கிடைக்கிற ரஸானுபாவந்தான். ஒரு பெரிய வித்தியாசம் பூமாலை வாடிப் போவது. பாமாலை லோகம் உள்ளளவும் வாடாது."

தெய்வத்தின் குரல் - பக்கம் - 615

தேவார முதலிகள் என்று அழைக்கப்படும் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தர மூர்த்தி நாயனார் அருளியவை (பிற்காலத்தில்) தேவாரம் என்று அழைக்கப்பட்டன. இந்த பாவகைக்கு முன் அப்பர் திருவாக்குகளே தேவாரம் என்ற வழக்காற்றைப் பெற்றிருந்தது. சம்பந்தரின் அருளிச் செயல்கள் திருக்கடைக் காப்பு எனவும் சுந்தரரின் அருளிச் செயல்கள் திருப்பாட்டு எனவும் அழைக்கப்பட்டன. மூவரைப்போல் இன்னொருவர் மாணிக்கவாசக

சுவாமிகள். நாயனார் என்ற திருநாமம் மூவருடையது. சுந்தரர் பாடிய அறுபத்து மூவரும் நாயன்மார் என்றே பாடப்பட்டனர். நால்வர் என்ற தொகைப் பெயர் சைவசமயாரியரையே குறிக்கும். நாயனார் என்பது தலைவர், வழிப்படுத்துபவர் ஆற்றுப்படுத்துபவர், பெருமையிற் சிறந்தவர் என்று பொருள். பெண்ணினச் சிவனடியார்களை நாச்சியார் என அழைத்ததாய்த் தெரியவில்லை. உ+ம் மங்கையர்க்கரசியார், திலகவதியார், புனிதவதியார், இசைஞானியார். ஆயினும் விநாயகரை மூத்த நாயனார் என அழைப்பதைப் பதினோராந் திருமுறையிற் காண்கிறோம். தேவாரமுதலிகள் தந்த பாசுரங்களை அவ்வைப் பிராட்டி மூவர் தமிழ் எனப் பாடியுள்ளார்.

**தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்**
**மூவர் தமிழும் முனிமொழியும் - கோவை**
**திருவா சகமும் திருமூலர் சொல்லும்**
**ஒருவா சகமென்று உணர்.**

நல்வழி 40

பொருள்:- திருவள்ளுவர் இயற்றிய திருக்குறளும், நான்கு வேதங்களின் முடிவாகிய உபநிடதங்களும் அப்பர், சுந்தரர், சம்பந்தர் என்னும் சமய குரவர் பாடலாகிய தேவாரமும் திருவாதவூர் முனிவராகிய மாணிக்க வாசகர் பாடியருளிய திருக்கோவையார் திருவாச கங்களும், திருமூல நாயனார் அருளிய திருமந்திரமும் ஒரு பொருளைக் குறித்து வருவன. திருமந்திரத்தை மூவாயிரம் தமிழ் என மூல முனியே எழுதி வைத்துள்ளார். (பாடல் எண் - 3046)

பதினோராந் திருமுறையில் தேவார முதலிகளையும் மணிமொழியாரையும் ஒன்றிணைத்துப் பட்டினத்தடிகள் பாடுகிறார்

**வித்தகப் பாடல் முத்திறத்தடியரும்**
**திருந்திய அன்பின் பெருந்துறைப் பிள்ளையும்**
**திருவிடைமருதூர் மும்மணிக் கோவை**

முத்திறத்தடியார் - சுந்தரர், (அப்பர் சம்பந்தர். பெருந்துறைப் பிள்ளை - மாணிக்கவாசகர். மூவர் பாடலைப் போல் தான் கனதியான கருத்துள்ள பாமாலைகளைப் பாட முடியாமற் போய்விட்டதே எனத் தாயுமான சுவாமிகள் கூறுகிறார்.

**பாகத்தி னால்கவிதை பாடிப் படிக்கவோ**
**பக்திநெறி இல்லை வேத**
**பாராய ணப்பஙுவல் மூவர்செய் பஙுவலது**
**பகரவோ இசையும் இல்லை**

சச்சிதானந்தசிவம் 3

**அடியிட்ட செந்தமிழின் அருமைஇட்டு ஆரூரில்**
**அரிவையோர் பாவை வாயில்**
**அம்மட்டும் அடியிட்டு நடைநடந் தருள்அடிகள்**
**அடியீது முடியீது என**

சுந்தரரின் பாவணத் தமிழைக் கேட்கவே எம் பெருமான் தூது நடந்தது என்பதை உணர்ச்சி பூர்வமாகப் பாடியுள்ளார் தாயுமானவர். மூவர் தமிழ் போல நால்வர் தமிழின் மேன்மையும் பொற்சாசனமாய் எழுதி வைக்கப்பட்டுள்ளது.

**வேதம் பசு, அதன் பால் மெய் ஆகமம், நால்வர்**
**ஓதும் தமிழ் அதனின் உள்ளுறு நெய் - போதமிகு**
**நெய்யின் உறுசுவையாம், நீள்வெண்ணை**
**மெய்கண்டான்**
**செய்த தமிழ் நூலின் திறம்**

நால்வர் ஓதும் தமிழ், வேதம் ஆகமம் என்பவற்றின் மரபில் தோன்றுகிறது. நால்வர் ஓதும் தமிழின் சுவையாக அமைவதே சிவஞானபோதம். இவ்வளவு மேன்மை மிக்க அருளாளர் அருளிய தோத்திரப் பாமாலைகளைச் சுத்தானந்த பாரதியார் "அப்பருஞ் சுந்தரரும் ஆளுடைப் பிள்ளையும் அருள் மணிவாசகரும் எப்படிப் பாடினரோ - பொருள் உணர்ந்து இப்படிப் பாடலாமோ ஆசை கொண்டேன் சிவனே" எனப் போற்றுகின்றார். தேவாரத்தின் சிறப்பம்சங்களை

அனுபூதி வாயிலாக உணர்ந்த தம்பைச் சித்தர் இப்படிப் பாடியுள்ளார்.

**தாவாரமில்லைத் தனக்கொரு வீடில்லை**
**தேவாரம் ஏதுக்கெடி ~ குதம்பாய்**
**தேவாரம் ஏதுக்கெடி** (சித்தர் பாடல்)

பிற்கால மகா கவியான பாரதியும் திருப்புகழ் தேவாரம் பாடியிருக்கிறார். - தேவாரம்

**அதியாசைவிஞ்சி நெறியேதுமின்றி**
**அவமான வஞ்சமிகவே**
**துதிமேவு மெங்கள் பழநாடு கொண்டு**
**தொலையாத வண்மை யறநீள்**
**சதியேபு ரிந்த படுநீசர் நைந்து**
**தனியோட நன்கு வருவாய்**
**நதியேறு கொன்றை முடிமீதிலிருந்து**
**நகையாடும் செம்பொன் மணியே!**
பாரதியார் கவிதைகள் பக்கம் 516
பதிப்பாசிரியர் டாக்டர் ந. சுப்புரெட்டியார்.

தேவாரம் என்ற வழக்காறு இரட்டைப் புலவர் நாவிலும் தவழ்ந்துள்ளமை வெளிப்படை.

**மூவாத பேரன்பின் மூவர்முதலிகளும்**
**தேவாரஞ் செய்ததிருப் பாட்டாகும்**
ஏகாம்பரநாதர் உலா.

முதன் முதல் தேவாரம் என்ற பாவனையைக் கொணர்ந்தவர் எல்லப்ப நாவலர்.

**சைவத்தின் மேற்சமயம் வேறில்லையதிற் சார்சிவமாம்**
**தெய்வத்தின் மேற்தெய்வம் இல்லையெனு**
**நான்மறைச் செம் பொருள்வாய்**
**மைவைத்த சீர்திருத் தேவாரமும் திருவாசகமும்**
**உய்வைத் தரச் செய்த நால்வர் பொற்றாளெம்**
**உயிர்த்துணையே**
அருணைக்கலம்பகம்

தே + ஆரம் = இறைவனுக்குப் பாமாலை.
தே + வாரம் = இறைவனிடத்து அன்பை விளைவிப்பது. வாரம் - இறைவன் பால் வைத்த பேரன்பு.

**தொன்னெறி யியற்கைத் தோரிய மகளிரும்**
**சீரியல் பொலிய நீரல நீங்க**
**வாரம் இரண்டும் வரிசையிற் பாட**
**சிலம்பு அரங் கேற்றுகாதை**
வாரம் - தெய்வப் பாடல்

இத்தேவார திருவாசகங்களை வேதசாரம் என்று சொன்னவர் காசிவாசி செந்திநாதையர் அவர்கள். இவை மந்திரங்களுமாம்.

வேதங்கள் அனைத்தும் பிரணவத்துள் அடங்கும். பன்னிரு திருமுறையின் துவக்கம் தோடு. இறுதி (பெரிய புராணம்) உலகெலாம் என்பது. தோடுடைய செவியனில் வரும் 'தோ' வில் அமைந்த 'ஓ' வும் உலகெலாம் என்பதின் 'ம்' (மகரஒற்று) என்பதும் சேர 'ஓம்' என்றாகும். இதில் இருந்து திருமுறை சைவசமயிகளின் தமிழ் வேதமாம். திருமுறையில் உள்ள ஒவ்வொரு சொல்லும் மந்திர ஆற்றல் உள்ளவை. இறைவன் 'ஓம்' என்னும் பிரணவ வடிவானவன். திருமுறைகள் மந்திரங்களே என்பதைத் திருமுறை கண்ட புராணங் கூறும்.

**மந்திரங்கள் எழுகோடி ஆதலினால் மன்னுமவர்**
**இருந்தவகை திருமுறைகள் ஏழாக எடுத்தமைத்து**
**பந்தமுறும் மந்திரங்கள் பதினொன்று ஆதலினால்**
**அந்தமுறை நான்கினொடு முறை பதினொன்று**
**ஆக்கினார்.**

**திருமுறை கண்ட புராணம் ~ முதலாம்**
**ஆதித்த சோழன்**
**திருமுறை கண்ட சோழன் திருமுறைகள் யாவும் இறைவனது (திரு) வாய்மொழியாகும்.**

மிகுதி அடுத்த இதழில்............

# திருவருட்பயன்

சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம்

## ஏழாம் அதிகாரம் - உயிர்விளக்கம்

### அருளை அடைதற்கு ஏது

**தூநிழலார் தற்காருஞ் சொல்லார் தொகுமிதுபோற்**
**றானதுவாய் நிற்கும் தரம்.**

பதவுரை: தூநிழல் ஆர்தற்கு - (வெயிலில் வருந்தினவன்) குளிர்ந்த நிழலைச் சேர்தற்கு, ஆரும் சொல்லார். அங்கே போ என்று ஒருவருஞ் சொல்லவேண்டுவதில்லை (அவன் தானே விரைவாக ஓடிச் சேருவான்), தொகும் இது போல் (ஆகும்) - பொருந்திய இந்த முறைமை போலும், தான் அதுவாய் நிற்குந் தரம் - மலங்களின் துன்பங்களால் வருந்தினோன் அருளைக் கண்டவுடனே தான் அந்த அருளோடு சேர்ந்து நிற்குந் தன்மை.

### ஆன்மா அருளை அறியுங் காலம்

**தித்திக்கும் பாறானுங் கைக்குந் திருந்திடுநாப்**
**பித்தத்தின் றான்றவிர்ந்த பின்.**

பதவுரை: தித்திக்கும் பால்தானும் கைக்கும் - (பித்தநோயுடையாரது நாவுக்கு) மதுரமான பாலும் கசப்பாயிருக்கும். பித்தத்தின் தவிர்ந்தபின் - பித்த நோயினின்றும் நீங்கியபின், நா - நாவானது, திருந்திடும் - கைத்த பால் தித்திக்கத்தக்கதாகத் திருந்திவிடும்.

### ஆன்மா அருளைத் தானாகக் காணமாட்டாது

**காண்பா னொளியிருளிற் காட்டிடவுந் தான்கண்ட**
**வீண்பாவ மெந்நாள் விழும்**

பதவுரை: ஒளி - ஒளிவடிவாகிய ஞானமானது, இருளிற் காட்டிடவும் - ஆணவமாகிய இருளில் ஆன்மா கிடந்து மயங்கும் போது தன்னைக் காட்டிடவும், காண்பான் - அதைக் காணும் ஆன்மா, தான் கண்டவீண் பாவம் - தன் முயற்சியால் அதைக் கண்டதாக நினைப்பதால் வீணாக வரும் பாவமானது, எந்நாள் விழும் - எப்போது நீங்கும்.

### திருவருள் ஆணவத்தை ஒத்திருக்கும் வகை

**ஒளியு மிருளு மொருமைத்துப் பன்மை**
**தெளிவு தெளியார் செயல்.**

பதவுரை: ஒளியும் இருளும் ஒருமைத்து - திருவருளும் ஆணவமும் தன்வகைப் பொருளைக் காட்டி ஒழிந்ததை மறைக்குந் தன்மையில் ஒத்திருக்கின்றன. பன்மை - அவற்றிற்குள்ள பேதம் யாதெனில், தெளிவு - அருளானது தன்னை அடைந்தோர்க்கு உண்மைப்பொருளைக் காட்டுவதும், தெளியார் செயல் - ஆணவமானது அது நீங்காதார்க்குப் பொய்யாகிய பொருள்களைக் காட்டுதலுமாம்.

### திருவருளை யடைந்தோர்க்குக் கடவுள் வெளிப்படுதல் எளிது

**கிடைக்கத் தகுமோநற் கேண்மையார்க் கல்லால்**
**எடுத்துச் சுமப்பானை இன்று.**

பதவுரை: நல் கேண்மையார்க்கு அல்லால் - அன்பு நிறைந்த சுற்றத்தவரை உடையவர்க் கல்லாமல், எடுத்துச் சுமப்பானை - அவருடைய சுமை எல்லாவற்றையும் எடுத்துச் சுமப்பவன் ஒருவனை, இன்று கிடைக்கத்தகுமோ - இப்போது பெற்றுக்கொள்ளுதல் கூடுமோ,

கூடாது, (அதுபோல) பேரன்பால் திருவருளைச் சார்ந்தவருக்கு அவருடைய வினைகளையும் வினைப்பயன்களையும் சுமப்பவராகிய கடவுள் எளிதிற்றோன்றுவர்.

### திருவருளைச் சாராதார் கடவுளை அடையார்

**வஞ்ச முடனொருவன் வைத்த நிதிகவரத்**
**துஞ்சினனோ போயினனோ சொல்**

பதவுரை: ஒருவன் வைத்த நிதி - ஒருவன் வைத்த பொருளை, வஞ்சமுடன் கவர - வேறொருவன் களவாக எடுத்துக் கொண்டு போக, துஞ்சினனோ போயினனோ - அந்தப் பொருளையுடையவன் உறங்கினானோ அல்லது அவ்விடம் விட்டு நீங்கினானோ, சொல் - சொல்லுவாயாக,

### அருள் ஆன்மாவை வசப்படுத்தல்

**தனக்குநிழ லின்றா வொளிகவருந் தம்பம்**
**எனக்கவர நில்லா திருள்.**

பதவுரை: தனக்கு நிழல் இன்றா(க) - (சூரியன் உச்சியில் நிற்கும்போது) தன்னுடைய நிறந் தோன்றப் பெறாமல், ஒளி கவருந் தம்பம் என - சூரிய கிரணத்தாற் கவர்ந்து கொள்ளப்படும் படிகத் தூண்போல, கவர - (ஆன்மா தன்னறிவுறப் பெறாமல் திருவருளாற்) கவர்ந்து கொள்ளப்படுமாயின், இருள் நில்லாது - அந் நிலையிலே மலம் நில்லாமற் போகும்.

### அருளை முன்னிட்டு அதற்குப் பின்னே ஆன்மா நிற்றல் வேண்டும்

**உற்கைதரும் பொற்கை யுடையவர்போ**
**லுண்மைப்பின்**
**நிற்க அருளார் நிலை**

பதவுரை: உற்கைதரும் பொற்கை உடையவர் போல் - தழற் கொள்ளியைப் (= சூளைப்) பிடித்திருக்கும் அழகிய கையையுடையவர் (தாம் - வேண்டிய பொருளைக் காணும் போது அக்கொள்ளியை முன்னிட்டுத் தாம் பின்னே நிற்பது) போல, உண்மைப் பின்நிற்க - (ஒருவர் சிவத்தைக் காண வேண்டின்) அருளைத் தமக்கு முன்னாக்கித் தாம் அதன் பின்னே நிற்பாராக, அருள் ஆர்நிலை - அருளோடு பொருந்தி நிற்கும் நிலை இதுவே.

### அருளுக்கு முன்னே நிற்கும்போது சிவத்தைக் காணாமைக்கு ஏது

**ஐம்புலனாற் றாங்கண் டகன்றா லதுவொழிய**
**ஐம்புலனார் தாமா ரதற்கு**

பதவுரை: (சிவம்), ஐம்புலனால் - மெய், வாய், கண், மூக்குச் செவிகளால், தாம் கண்டகன்றால் - தாம் கண்ட பொருள்களுக்கு அப்பாற்பட்ட பொருளாயின், அது ஒழிய - அருளாலேயன்றி, அதற்கு பேரின்பமாகிய சிவத்தை யறிதற்கு, ஐம்புலன் ஆர் தாம் ஆர் - ஐம்பொறிகளுக் கேனும் தமக்கேனும் தகுதியில்லை.

### இதுவுமது

**தாமே தருமவரைத் தம்வலியி னாற்கருதல்**
**ஆமே யிவனா ரதற்கு.**

பதவுரை: தாமே தரும் அவரை - ஒரு பொருளை ஒருவர்க்குத் தாமே விரும்பித் தருபவரை (மதியாது), தம்வலியினாற் கருதல் ஆமே - தம் சாமர்த்தியத்தினால் அவரிடம் அதைப் பெற்றதாக நினைத்தால் நீதியாகுமா? ஆகாது; (அதுபோல, திருவருளானது தானாக விரும்பி ஆன்மாவுக்குப் பேரின்பத்தைக் கொடுக்க, ஆன்மா தன்னுடைய ஆற்றலால் அதைப் பெற்றதென்று நினைத்தலாகாது); இவன் அதற்கு ஆர் - (திருவருளாலன்றி) அப்பேரின்பத்தைப் பெறத்தக்க தகுதி ஆன்மாவுக்குச் சிறிதுமில்லையே,

o

**Registered as a News Paper at the G.P.O.**

*Printed By: Chemax Prints (PVT) LTD, No: 07, Charles Place, Dehiwala.*
*email@chemaxprints.com Tel:2723963, Fax:94-11-2737127*